*பார்வைக்கு...*

| | |
|---|---|
| சஞ்சிகை | : இளவேனில் |
| ஒன்பதாம் பதிப்பு | : 17 ஜனவரி 2016 |
| வெளியிடுவோர் | : கேசி தமிழ் மன்றம் |
| வடிவமைப்பு | : க.பார்த்தீபன் |
| அட்டைப்படம் | : இ.பார்த்தீபன் |
| தொடர்புகட்கு | : கேசி தமிழ் மன்றம்<br>PO BOX 2516,<br>Fountain Gate, Vic - 3805<br>Australia. |

# பொருளடக்கம்


- வணக்கம் *3*
- தலைவர் உரை *4*
- தை அணங்கே நீ வருவாய் *5*
- தமிழ் *7*
- சுமையிதை கொஞ்சம் சுமக்கலமே *8*
- என் தாய் மொழி தமிழ் *11*
- மிருகக்காட்சி சாலை *11*
- ஒன்று பட்டால் உண்டு வாழ்வு *12*
- எனது ஒரு நாள் *14*
- சிறுவர்கள் தமிழ் கற்க வேண்டியதன் அவசியம் *14*
- பறவைகள் *15*
- பெற்றோருடைய எதிர்பார்பே அவர்களின் ஏமாற்றம் *16*
- மழலைத் தமிழ் *17*
- பூ *18*
- சுத்தம் சுகம் தரும் *19*
- எனது விருப்பமான நபர் *19*
- நட்பு *20*
- ஊருக்கு போகும் ஆசை *22*
- குழந்தை முருகன் *23*
- இன்றை வாக்கைச் சூழலில் தனிக்குடும்பம் வாழ்வா அல்லது கூட்டுக்குடும்ப வாழ்வா நன்மை தரும் *24*
- இணையம் *25*
- யேசு பாலன் பிறந்தநாள் கவலைகள் மறந்த நாள் *26*
- பிள்ளையார் *30*
- பெற்றோர்கள் சொல்வதெல்லாம் நமது நமைகே *31*
- இதுக்குத் தான் நான் அப்பவே சொன்னேன் *32*
- அப்துல் காலம் *35*
- நான் *36*
- குழந்தை கிருஷ்ணா *37*
- தேன் சிந்தும் மலர்கள் *38*
- ஆறு (தொடர்கதை ) *43*
- அரும்புகள் இறைவனன்றோ *46*

# இளவேனில்

## வணக்கம்.

**"யாதும் ஊரே; யாவரும் கேளிர்"**

புலம்பெயர் தேசத்தில் தமிழ் மொழியையும் கலாச்சாரத்தையும் மற்றும் பண்பாட்டையையும் பாதுகாத்து அதன் முக்கியத்துவத்தை அடுத்த சந்ததியினருக்கு எடுத்துச் செல்லல் மட்டுமன்றி அவற்யை கடைப்பிடித்தல் போன்றவற்றை தலயாய நோக்கங்களாக கொண்டு செயற்படும் கேசி தமிழ் மன்றத்தின் வெளியீடான இளவவனில் சஞ்சிகையின் ஒன்பதாவது மலரோடு வாசகர்களாகிய உங்களை சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியயைகின்றோம்.

இளவேனில் சஞ்சிகையானது, அடுத்த தலைமுறையினர் மத்தியில் தமிழ் மொழி மற்றும் தமிழ் அடையாளம் என்பவற்றை அறிமுகப்படுத்தி, அவர்களை தமிழ் மொழியில் எழுத வாசிக்க ஊக்கபடுத்திக் கொண்டிருகின்றது என்றால் மிகையாகாது. மேலும் வளர்ந்துவரும் ஆக்கப்படைப்பாளிகளையும் மாணவர்களையும் ஊக்கப்படுத்தி அவர்களுடைய ஆக்கங்களை சந்சிகையாக வெளியிடுவதன் மூலம் அவர்களுக்கு சிறந்த ஒரு களத்தை அமைத்துக் கொடுக்கின்றது.

பல்வேறு கலாச்சார பண்பாடுகளிடையே வாழ்ந்துகொண்டிருக்கும் எமது அடுத்த தலைமுறை, கால ஓட்டத்தில் தமிழையும் தமிழ் கலாச்சாரத்தையும் மறந்துவிடக்கூடாதென்பதற்காய் கேசித் தமிழ் மன்றத்தின் முயற்சிகளில் இதுவும் ஒன்றாகும்,

மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆக்கப் படைப்பாளிகள் அனைவரும் உங்கள் ஆக்கங்களை காலகிரமத்தில் அனுப்பிவைத்து இளவேனில் ஆசிரியர் குழுவிற்கு ஆதரவு தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்,

மேலும் இளவேனில் சஞ்சிகை பற்றிய ஆக்கபூர்வமான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கி, இளவேனில் சஞ்சிகையின் வளர்ச்சிக்கு வித்திடுமாறுஆசிரியர் குழு தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றது.

**நன்றி!**

**ஆசிரியர் குழு**

# தலைவரின் உள்ளத்திலிருந்து ......

*சிந்தைக்கு மகிழ்வு அளித்திடும் பல அழகிய எழுத்துப் பூக்களுடன் பூத்துக் குலுங்கியபடி, கேசி தமிழ் மன்றத்தின் இளவேனில் சஞ்சிகை இப்போது உங்கள் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கின்றது.*

*பல புதிய ஆக்க இலக்கிய படைப்பாளிகளின் , குறிப்பாக இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்களின் படைப்புகளை உள்ளடக்கி நிற்கும் இவ் ஒன்பதாவது பதிப்பு, இளைய தலைமுறையினரிடம் எழுத்தார்வத்தை தூண்டுவதில் இளவேனில் எனும் முயற்சி வெற்றியடைந்து வருகின்றமைக்கு சான்றாக அமைகின்றது. அவுஸ்திரேலியாவில் இருந்து வெளிவருகின்ற தமிழ் பத்திரிகைகளினதும் சஞ்சிகைகளினதும் எண்ணிக்கை குறைந்து வரும் நிலையில், கேசி தமிழ் மன்றத்தின் தமிழ் பணியின் ஓரங்கமாக , இளவேனில் சஞ்சிகை அகவை ஐந்தைத் தொட்டு பொலிவு பெறுகின்றமை கண்டு மகிழ்வடைகின்றேன்.*

*தமிழை வாசிக்கின்ற - தமிழில் எழுதுகின்ற எமது சந்ததிகள் இத்தேசத்தில் நிலைபெற வேண்டும் என்கின்ற நோக்கில் வெளிவருகின்ற இளவேனில் தொடர்ந்து தன் பாதையில் வெற்றியுடன் பயணிக்க, உங்கள் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் பங்களிப்பையும் தொடர்ந்து வழங்க வேண்டும் என வேண்டி விடைபெறுகின்றேன்.*

*நன்றி!*

**மதி மதியழகன்**

**தலைவர்**

**கேசி தமிழ் மன்றம்**



## தை அணங்கே நீ வருவாய்

திருமதி. கலா சிவகுமாரவேலு

அவனியெல்லாம் அகமகிழ்ந்து அகிலமெல்லாம் குதூகலித்து
வசந்தத்தின் வாசலிலே தடம் பதிக்கும் நாளினிலே
தை தை என தளிர் நடை பயின்று வரும்
தங்கத் திருமேனியளே நீ வருக!

மானிட சிந்தையிலே புதுமைகள் ஊற்றெடுத்து
மாண்புகள் மேலோங்கி மனிதநேயம் பெருகிடவே
சிற்றிடை கலை பயில சீரடிகள் நடம் புரிய
திருமகளே நீ வருக!

கவின் மிகு கன்னியரும் தரல் மிகு காளையரும்
நலம் காண இல்லற சோலையிலே
இனிதாக இணைந்திடவே தைமகளே
நீ வரமருள்வாய்!


செந்நெல் விளை கழனியிலே நெற்றி வியர்வை
நிலத்தில் விழ நாளெல்லாம் பாடுபட்டு அயராத
உழைப்பினில் வாழ்ந்த காராளர் வாழ்வினில்
வசந்தத்தின் ஒளி வீச உத்தமியே நீ வருக!

கொஞ்சும் மழலையிலும் காதல் மிகு கன்னியரின்
கன்னல் பேச்சினிலும் அஞ்சாத சிங்கம் போல்
வீறு நடை போடும் காளையரின் வெற்றி
களிப்பினிலும் கலந்து உன் கடை விழிபார்வையினால்
வற்றாத அருள் சுரப்பாய்!

மங்கை உன் வரவு கண்டு அவனியே அகமகிழும்
அன்னையர் களிப்புடனே அகல் விளக்கேற்றிடுவர்
முகத்தில் கோலமிட்டு முறையான பந்தலிட்டு
அழகாக அடுப்பும் மூட்டி புதுக்கலசம் பொங்கிடவே
குறையாமல் பாலும் ஊற்றி தை மகளே
வருக வருகவென நின் திருவடியில் சிரம் தாழ்த்தி
உளமாற தொழுது நிற்பர்!

தரணி வாழ் மாந்தரெல்லாம் பண்ணோடு இசை
பாடி பூங்குயிலே உன் வரவு காண அவாவி
நிற்கும் பொழுதினிலே காரிகையே உன்
காதலனாம் கதிரவனும் கன்னி உன் எழில் காண
கீழ் திசையில் தூன்றிடுவான்

இந்நாளே நந்நாளாம்
தொடர்ந்து வரும் பொன்னாளாம்...




–விபூசனா தீபன்–



# சுமையிதை கொஞ்சம் சுகமாக்கலாமே!

-சியாமளா யோகேஸ்வரன்-

மனிதன் தன் வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும் ஏதாவதொரு சுமையைச் சுமந்து கொண்டுதான் இருக்கிறான். உறவுகள், பொறுப்புகள், கடமை, கல்வி என்று பலவிதமான சுமைகளை நாம் தாங்கினாலும், சில சுமைகள் மனதுக்கு நிறைவு தருவனவாக, வாழ்வை முழுமைப்படுத்துவனவாக இருக்கின்றன. இதில் கல்விச்சுமை நம் குழந்தைகளுக்கு மன அழுத்தத்தைத் தருகின்ற தொல்லைச் சுமையாக அவர்களின் கவலையற்ற சிறுவர் பராயத்தில் திணிக்கப்பட்டுள்ளதா என்பதுதான் இந்தக் கட்டுரையின் தேடலாக மட்டுமல்ல, ஒரு பெற்ற மனதின் தேடலாகவும் இருக்கின்றது.

எந்தச் சூழலிலும் ஒருவரிடமிருந்து பிரிக்க முடியாத, அழிக்க முடியாத ஒரு பெருஞ் செல்வம் கல்வியாகும். அதிலும் கற்றவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பது போல் எத்தனை தடைகள் வந்தாலும் அத்தனையையும் தகர்த்து தன்னம்பிக்கையுடன் வாழ்க்கையை எதிர் கொள்ள வைத்தது நாம் கற்ற கல்வியெனும் ஆயுதந்தான் என்பதை புலம் பெயர்ந்து வாழும் யாராலும் மறுக்க முடியாது. மண் வாசம் இன்னும் ஒட்டியிருக்கும் எம் மனங்களில் கல்வியால் ஏற்பட்ட தோல்விகளும், அனுபவித்த சோதனைகளும் பசுமரத்தாணி போல் இன்னும் மனங்களில் அழியாச் சுவடுகளாகப் பதிந்திருக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

எதுவித செய்முறை விளக்கங்களுமின்றி விஞ்ஞானத்தை படித்ததில் தொடங்கி, நடைமுறைப் புரிதல்களின்றி ஏட்டுச் சுரைக்காயாக, பரீட்சையில் புள்ளிகள் என்ற ஒரே இலக்குடன் கற்ற சில பாடங்கள் எம் நடைமுறை வாழ்க்கையில் எந்தவிதத்தில் உதவின என்று சிந்தித்தால் அவையெல்லாம் பதிலறியாப் பெரும் புதிர்களாக மட்டுமே இருக்கும். ஆனாலும் அத்தனையையும் புறந்தள்ளி விட்டு, அதைத் தொடர்கதையாக்கும் அதே மன நிலையுடன் இன்று எம் குழந்தைகளை வாட்டி எடுக்கின்றோமா என்பதுதான் எம் போன்ற பெற்றோரின் மனங்களில் மனச்சாட்சியை தட்டிக் கேட்கும் ஒரு பெரும் கேள்வியாக இருக்கிறது. பொறியியலாளர், வைத்தியர் என்ற பதவிகள் தரும் மோகமும், சிலவேளைகளில் அதைத் தவற விட்ட சோகமும் சேர்ந்து கொள்ள, எம் ஆசைகளையும், எதிர்பார்ப்புகளையும் அவர்களின் தலையில் திணித்து வைப்பதோடு, அவ்வப்போது நம்மைக் கேள்வி கேட்கும் மனச்சாட்சியை அத்தனையும் நம் குழந்தைகளின் நன்மைக்குத் தானே என்று அடக்கி வைத்து விடுகிறோம்.

அந்நிய மண்ணில் எமது குழந்தைகள் திக்கின்றி தவிக்க விடாமலிருக்க, கல்வி என்பது கட்டாயத் தேவை என்று தெளிவாகத் தெரிந்திருக்கும் பெரும்பாலான பெற்றோர்களுக்கு, புலம் பெயர் நாடுகளின் பாடத்திட்டங்கள், உயர்கல்விக்கான தேவைகள், வேலை வாய்ப்புகள் பற்றிய சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை அல்லது சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதுதான் நிசர்சனமான உண்மை. பெரும்பாலான பெற்றோர்கள் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், துறைசார் நிபுணர்கள் என்று பிரகாசித்துக் கொண்டிருப்பவர்களாக இருக்கும் போது, அவர்கள் அதே புத்திசாலித்தனத்தையும், அறிவுக்கூர்மையையும் தமது குழந்தைகளிடம் எதிர்பார்ப்பதில் எந்தவித தவறுமில்லை.

பாகற்காய் போட்டால் சுரைக்காய் முளைக்குமா? என்று வயதானவர்கள்தான் வாதிடுவார்கள் என்பதில்லை, கொஞ்சம் விஞ்ஞானமும் ஓத்துழைத்தால், அதே பிறப்பியல் கூறுகள் குழந்தைகளிடம் இருக்கத்தான் வேண்டும் என்பதால் அந்த எதிர்பார்ப்பில் தப்பேதும் இருப்பதாகவும் தெரியவில்லை.

நாம் வளர்ந்த சூழலை கொஞ்சம் பின் நோக்கிப் பார்ப்போமானால், காலத்தால் அழியாத எத்தனை இனிய ஞாபகங்களை உள்ளடக்கியதாக எமது சிறார்ப்பருவம் இருந்திருக்கிறது. மிகச்சிறிய பராயத்திலேயே இயற்கைச்சூழல் முதல் எமது நண்பர்கள், உறவினர்களுடன் சேர்ந்து விளையாடும் விளையாட்டுகள் வரை, எதையும் பகுத்து ஆராயுந்திறனை நாம் தெரிந்து கொள்ளாமலேயே எம்மிடம் வளர்த்திருக்கின்றன. இதுதான் என்று கற்றுத் தராமலேயே கைகால்கள் பல்வேறு இயக்கங்களையும் நுணுக்கங்களையும் கற்றுக் கொள்ள, மூளையோ வெற்றிக்கான சூத்திரத்தை இலகுவில் கற்றுக் கொண்டிருக்கிறது. அழுது கொண்டே பாடசாலை வாசலில் முதல்நாள் கால் வைத்தாலும், எமது மனதும் மூளையும் எந்த சவாலையும் சந்திக்கத் தயார்ப்படுத்தப் பட்டு விட்டது என்பது தான் உண்மை.

இப்போது நமது குழந்தைகள் தொலைத்துவிட்டது, தமது சொந்தங்களையும், அடையாளங்களையும் மட்டுமல்ல, அத்தனை குழந்தைப்பருவத்து நினைவுகளையும் அதன் இனிமைகளையுந்தான். குடும்பப் பொறுப்புகளைத் தனியொருவனாக தாங்க வேண்டிய நிலையில் தந்தையும், குடும்பத்தை எந்த முன் அனுபவமும் இல்லாத நிலையில் வழி நடத்த வேண்டிய நிலையில் தாயுமாய் அந்நிய மண்ணில் புலம் பெயர்ந்து தம் வாழ்க்கையைத் தொடங்கும் இளம் தம்பதியினரின் மனதில் எத்தனைவிதமான அச்சங்களும், எதிர்காலம் பற்றிய பயமும் ஆட்சி செய்து கொண்டிருக்கும் என்பது எமக்கெல்லாம் தெரியாததொன்றல்ல. ஆக்கபூர்வமாகக் கழிந்த எம் குழந்தைப்பருவம் போலன்றி, எப்போது நம் குழந்தைகள் தூங்குவார்கள் அல்லது ஏதாவது தொழிநுட்பத்துக்குள் ஒன்றிப் போய் எமக்குக் கொஞ்சம் ஓய்வு தருவார்கள் என்பது தான் பெரும்பாலான தனித்து விடப்பட்ட பெற்றோர்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. இதனால் குழந்தை பேசுவதைக் குறைக்கிறது, சூழலிருந்து கற்பதை விடுத்து எதற்குமே உதவாத தனக்கான ஒரு உலகில் ஒன்றிப் போய் விடுவதன் மூலம் சூழலிருந்தும் பெற்றோரிலிருந்தும் கற்றுக் கொள்ளும் கல்விக்கான அடித்தளத்தை இழந்து விடுகிறது.

பிள்ளைகள் சற்று வளர, எமது நட்பு வட்டமும் சற்று விரிய, அடுத்தவர்களைப் பார்த்து ஆசைப்படுவதாலோ அல்லது செய்ய வேண்டிய கடமையிலிருந்து தவற விடக் கூடாது என்ற கடமை உணர்வினாலோ அல்லது நிறைவேறா எமது கனவுகளை நிறைவேற்ற வேண்டும் என்பதாலோ பாட்டு, நடனம், நீச்சல், விளையாட்டு, வாத்தியக்கருவிகள் என்று அத்தனையிலும் சேர்த்து விடுகிறோம். ஐந்து விரல்களும் ஒரே மாதிரியானவையாக இருப்பதில்லை என்ற அடிப்படைத் தத்துவம் தெரிந்திருந்தாலும், நம் குழந்தைகள் என்று வரும் போது அதனை மறந்து விடுகிறோம் அல்லது நடைமுறைக்குக் கொண்டு வருவதில் மறந்து விட்டாற் போல் நடிக்கிறோம் என்பது தவிர்க்க முடியாத உண்மை. அத்துடன் ஒய்ந்து விடுகிறோமா என்றால் அதுதானில்லை, சமவயதுக் குழந்தைகளுடனோ அல்லது சகோதரர்களுடனோ ஒப்பிட்டுப் பேசி அதன் ஆளுமையை, தன்னம்பிக்கையை சிதைத்து விடுகிறோம். இத்தனை காசு செலவழிக்கிறோம், இப்படி அலைகிறோம், இத்தனை மணி நேரத்தை செலவழிக்கிறோம் என்று சொல்லிக் காட்டியே அவர்கள் மனதில் பொறுப்பற்றவர்கள் என்ற எண்ணத்தை விதைப்பதன் மூலம் அவர்களின்

ஆளுமையுடனான மனதைரியத்தை சிதைத்து விடுகிறோம். நம்மால் இத்தனையையும் செய்ய முடியுமா என்று நெஞ்சுக்கு நேர்மையாக நின்று எம்மை நாமே கேட்டுக் கொண்டால், அது அழுத்தம் திருத்தமாக 'முடியாது' என்ற உண்மையை உச்சந்தலையில் அடித்துச் சொல்லும்.

மற்றக் குழந்தைகள் போல நம் குழந்தையும் செய்ய வேண்டும் என்ற அர்த்தமற்ற எதிர்பார்ப்பை விட்டு விட்டாலே அது குழந்தைகளுக்கு மட்டுமல்ல விடிவுகாலம், நம்மைப்போல் தவிக்கும் பெற்றோரின் உள்ளங்களும் ஏக்கங்களற்ற தெளிந்த ஓடையாகி விடும். எந்தத் துறையில் குழந்தைகளுக்கு ஆர்வம் அல்லது எதில் அவர்கள் சிறந்து விளங்குகிறார்கள் என்பதை அறிந்து கொண்டு அதில் அவர்களுக்கு ஊக்கம் கொடுத்தால், அவர்களுக்குப் பயிற்சி செய்யப் போதிய நேரம் கிடைக்கும் என்பது மட்டுமல்ல அந்தப் பிஞ்சு உள்ளங்களின் சுமைகளும் குறைந்து விடும் என்பதால், குழந்தைப் பருவத்தை ரசிக்கவும் செய்வார்கள்.

வாழக்கையின் உயரத்தைத் தொடுவதற்கு கல்விதான் தடைகள் குறைந்த பாதை என்பது உண்மைதான், ஆனால் அந்தப் பாதையில் முட்களைத் தூவி அவர்களின் பயணத்தை பெற்றோராகிய நாமே மேலும் கடினப்படுத்தாமல் அவர்களுக்கு எமது அன்பும் ஆதரவும் வழிகாட்டலும் என்றும் துணை நிற்கும் என்பதைப் புரிய வைத்து விட்டால் அவர்கள் துள்ளலுடனும் நம்பிக்கையுடனும் வாழ்வை எதிர் கொள்ளமாட்டார்களா? மனம் விட்டுப் பேச நட்பான பெற்றோர்கள் துணை இருக்கிறார்கள், அவர்களின் அன்பு என்ற கதகதப்பான சிறகு துணையிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்ட பிள்ளைக்கு, வீட்டிலேயே தமது எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வு கண்டு விடலாம் என்ற நம்பிக்கை வந்து விட்டால், எந்தச் சூழ்நிலைக்கும் முகம் கொடுத்து, வரும் தடைகளை மோதித் தகர்த்திடும் மனவலிமையைக் பெற்றுவிடும் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. எமது நாடு போலன்றி, நாம் பெற்ற செல்வங்கள், நம் வாழ்வு முடியும் வரைக்கும் நம்முடன் வரப்போவதில்லை, எம்முடன் இருக்கும் காலங்களிலாவது இந்தச் சிறிய குடும்பம் என்னும் கூட்டில் ஆனந்தம் தவழட்டுமே.

மூத்த பிரஜைகளின் நலன் பேணுமுகமாக, கேசி தமிழ் மன்றத்தினால் நடாத்தப் படுகின்ற மூத்த பிரஜைகள் ஒன்றுகூடல், ஒவ்வொரு மாதத்தின் கடைசி சனிக்கிழமை முற்பகல் 10:00 தொடக்கம் மதியம் 2:00 மணிவரை, 112 High Street, Berwick, VIC 3806 எனும் முகவரியில் அமைந்துள்ள "Berwick Senior Citizens Hall" இல் நடைபெறுகின்றது. மேலதிக விபரங்கள் கேசி தமிழ் மன்ற இணையத்தளத்தில் www.caseytamilmanram.org.au பார்வையிடலாம்.

## என் தாய் மொழி தமிழ்!

**-சுவேத்தா-**

எமது தாய் மொழி தமிழ், இது கல் தோன்றி மண் தோன்றிய காலத்துக்கு முன் தோன்றிய மொழி ஆகும். தொன்மை வாய்ந்த மொழிகளில் இதுவும் ஒன்று. இதற்கு ஏடுகளும் கல்வெட்டுகளும் சான்றாக அமைகிறன. பெரும்பான்மையாக தமிழ் பேசும் மக்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ளனர். சிங்கப்பூரிலும் தமிழை உத்தியோகபூர்வ மொழியாக அங்கீகரித்துள்ளனர். உலகெங்கும் தமிழ் பேசும் மக்கள் பரந்து வாழ்கிறனர். தமிழ் மொழி இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழை கொண்டுள்ளது. இயல் உரைநடையில் அமைந்த நூல்களை குறிக்கிறது. இவை எண்ணத்தை வெளியிட உதவும். இசைத்தமிழ் பாடல்களை குறிக்கும். நாடகத்தமிழ் பேச்சாலும் நடிப்பாலும் கருத்துக்களை குறிக்கும். இத்தகைய சிறப்புமிக்க தமிழ் முதல், இடை, கடை ஆகிய சங்கங்களால் வளர்த்தெடுக்கப்பட்டது. இதற்கு அரசர்களும் பாடுபட்டனர். பல்லாயிரக்கணக்கான இலக்கியங்கள் தமிழரின் சிறப்பை கூறுகிறன. ஐம்பெருங்காப்பியங்களை கொண்டுள்ள தமிழ் செம்மொழியாக சிறப்பு பெற்றுள்ளது. பழமையான தமிழ் மொழி நவீன மொழிகளுக்கு ஈடாக வளர்ந்துள்ளது.இத்தகைய தமிழ் மொழியை பேசும் நாம் பெருமைப்பட வேண்டும். தமிழை பேணிக்காப்பது எமது கடமையாகும், இல்லையெனில் சில தொன்மையான மொழிகளை போல் தமிழ் அருகிவிடும்.

## மிருகக்காட்சிச் சாலை

**-வைஷ்ணவி கிரிதரன்-**

ஒரு சனிக்கிழமைய நான் எனது குடும்பத்தாருடன் மெல்போனில் இருக்கும் மிருகக்காட்சிச் சாலைக்கு சென்றேன். தினமும் மக்கள் வந்து போவர்கள். மிருகக்காட்சிச் சாலையின் காரியாலயத்தில் பணத்தை செலுத்தி நுழைவுச்சீட்டை பெற்றதும் உள்ளே செல்ல அனுமதிப்பார்கள். அங்கே மிருகங்கள் வகைப்படுத்தப்பட்டு கூட்டில் அடைக்கப்பட்டிருக்கும். பாலூட்டிகள், பறவைகள், ஊர்வன, நீரிலும் நிலத்திலும் வாழ்வன என்பன காணப்பட்டன. மிருகங்களுக்கு உணவளித்து பராமரிக்க சேவகர்கள் உள்ளனர். மற்றும் நோயுற்றால் சிகிச்சையளிக்க மிருக வைத்தியர்களும் உள்ளனர். உல்லாசப் பயணிகளின் வருகையும் அதிகம்.

# "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு"

*-கிரிசிகன் சீவராஜா-*

ஒரு ஊரில், இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். மூத்தவனின் பெயர் விக்னேஷ். இளையவனின் பெயர் சரவணன். அவர்களின் பெற்றோர்களின் பெயர்கள் சங்கரனும் காமாட்சியும் ஆகும். விக்னேஷ் உடல்பெருத்த சிறுவன், ஆனால் திறமைசாலி. சரவணன் வலிமை மிக்கவன், ஆனால் விவேகம் குறைந்தவன். இந்த சகோதரர்கள் சேர்ந்து இருக்க மாட்டார்கள். அவர்கள் எதிர் எதிராக இருப்பார்கள். எந்த குழுநிலை போட்டிகளிலும், விளையாட்டுகளிலும், ஒன்றாக செயல்படாமல் அடிக்கடி தோல்வியையே அடைந்து வந்தார்கள். இதை பார்த்த அவர்களின் பெற்றோர்கள் கவலையுடன் இருந்தார்கள்.

அதற்கு அவர்களின் தந்தையார் ஒரு முடிவு எடுத்தார். 'பிள்ளைகளே! இங்கே வாருங்கள்!' என்றார் சங்கரன். உடனே, அந்த பிள்ளைகள் சோர்வுடன் வந்து 'ஏன் அப்பா கூப்பிட்டீர்கள்?' என்று கேட்டார்கள் . 'நான் உங்களுக்கு ஒரு போட்டி வைக்க போகிறேன். அதில் யார் வெற்றி அடைக்கிறவனுக்கு ஒரு பரிசு தருவேன். ஆனால் அந்த போட்டி நாளைக்கு நடக்கும், தயாராகுங்கள்' என்றார் சங்கரன்.

அடுத்த நாள் வந்தது. 'பிள்ளைகளே! இன்றைக்குதான் உங்கள் போட்டி. இந்த போட்டியில் மூன்று போட்டிகள் நடைபெறும். அதில் வெற்றி பெறுபவருக்கு நல்ல பரிசுக் கிடைக்கும்.' என்றார் சங்கரன். 'முதலாவது போட்டி, யார் முதலில் கடவுளை கும்பிடுகிறார்கள் என்று பார்ப்போம். உங்கள் போட்டி இப்பொழுது பத்து வினாடிகளில் ஆரம்பிக்கிறது... ஒன்று, இரண்டு, மூன்று நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து!'

உடனே சரவணன் அருகில் இருந்த கோயிலுக்கு ஓடி சென்றான். ஆனால் விக்னேஷ் இன்னும் ஆரம்பிக்க வில்லை. அவன் யோசித்தான், 'கடவுள் என்றால் அப்பா அம்மா. அப்பா அம்மா என்றால் கடவுள் தானே!' என்று நினைத்தான் விக்னேஷ். உடனே, விக்னேஷ் அவரின் அம்மாவையும் அப்பாவையும் சுற்றி வந்து வணங்கி, ' பெற்றோரை நாங்கள் கடவுள் என்று நினைக்கலாமா?' என்று கேட்டான் வினேஷ். இதை பார்த்த சங்கரனும் காமாட்சியும் 'ஆம்' என்று சொல்லி மகிழ்ந்தார்கள்.

கொஞ்சம் நேரத்திற்குப் பிறகு, சரவணன் வந்தான். இதை பார்த்த அவனுக்கு கோபம் வந்தது. அடுத்த போட்டி ஆரம்பிப்பதற்காக, இருவரும் ஆயத்தம் ஆனார்கள். உடனே அப்பா சங்கரன், 'சரி, இரண்டாவது போட்டி. நீங்கள் இந்த பாரமான கல்லை பத்து வினாடிகளுக்கு முன் மற்ற பக்கத்திற்கு உருட்ட வேண்டும்.' என்றார். இதற்கு சரவணன் உறுதியாக தன்னால் முடியும் என்று விக்னேஷை ஏளனமாக பார்தான்.

'உங்கள் போட்டி இப்பொழுது பத்து வினாடிகளில் ஆரம்பிப்பிக்கிறது... ஒன்று, இரண்டு, மூன்று நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து!' என்றார் சங்கரன். உடனே, வினேஷ் அந்த பாரத்தை உருட்டப் பார்த்தான். ஆனால் உருட்டமுடியவில்லை. அதற்கு பிறகு, சரவணன் உருட்டினான். 'இந்த போட்டியில் சரவணன் வெற்றி அடைந்தான்.' இந்த இரண்டு போட்டிகளில் விக்னேஷ் : ஒரு புள்ளி, சரவணன் : ஒரு புள்ளி. இந்த இரண்டு

போட்டிகளில் வெற்றியாளர்கள் இல்லை. ஏனென்றால் முதலாவது போட்டி அறிவுப் போட்டி, அது விக்னேஷின் திறமை. இரண்டாவது, வலிமைப் போட்டி. அது சரவணனின் திறமை. எல்லோருக்கும் ஒவ்வொரு திறமை இருக்கும். அதை நாங்கள் சரியாக பயன்படுத்த வேண்டும்.

'அடுத்த போட்டி, இந்தக்கல்லை அந்த குன்றின்மேல் வைப்பவர்தான் இறுதியாக வெற்றி பெறுவார்.' என்றார் அப்பா சங்கரன். இதை கேட்டதும் விக்னேஷ் கொஞ்சம் யோசித்துப் பார்த்தான். உடனே தம்பி சரவணனோ, அந்த கல்லை உருட்டி மேலே கொண்டு செல்ல முயன்றான். ஆனால், அதை சிறிது மேலே உருட்டியதும், அது மேலே நில்லாமல் கீழே உருண்டு வந்தது. திரும்ப திரும்ப முயன்றும், அவர் வெற்றி அடைய வில்லை. இதைப் பார்த்த விக்னேஷ், சரவணன் கல்லை மேலே உருட்டியதும், மரக்கட்டை ஒன்றை எடுத்து, கல்லின் கிழே அது உருளாதபடி கல்லின் அடியில் வைத்தான். கல் அப்படியே நின்றது.

இதைப் பார்த்த தம்பி சரவணன், மகிழ்ச்சியுடன் 'அண்ணா, நாங்கள் இருவரும் சேர்ந்து இப்படி உருட்டி சென்று மேலே வைப்போம்' என்றான். அதற்கு விக்னேஷ் சம்மதித்தான். அதன் படி இருவரும் மெதுவாக அந்த கல்லை உருட்டி உருட்டி மேலே கொண்டு சென்று குன்றின் மேல் வைத்தார்கள்.

இதைப்பார்த்த அவர்களுடைய தந்தை மிகவும் மகிழ்ச்சியுடன், 'பார்த்தீர்களா? இருவரும் ஒன்றாக முயற்சி செய்த படியால், இருவருமே வெற்றி பெற்றீர்கள். அதனால் நீங்கள் எதிர் எதிராக இருக்காமல், ஒற்றுமையாக இருங்கள், பழகுங்கள்.' என்றார் அப்பா சங்கரன். அதற்கு பிறகு, இருவரும் ஒற்றுமையாக பழகி சந்தோசமாக இருந்து, இருவரும் அப்பாவின் எல்லா போட்டிகளிலும் சேர்ந்து வெற்றி பெற்றார்கள். இதை பார்த்த அவர்களின் பெற்றோர்கள் மிகவும் மகிழ்ந்தனர்.

**'எல்லோரும் ஒற்றுமையாக இருந்து, வெற்றி பெற முயன்றால், வெற்றியும், மகிழ்ச்சியும் உண்டாகும்.'**

## எனது ஒரு நாள்

-கவிஷ் சண்முகம்-

அப்பா என்னை 'டேய் கவிஷ்! எழுந்திரு' என்று கூறினார். அவர் காலை ஆறு மணிக்கு எழுந்து வேலைக்கு செல்ல தயாராகிக்கொண்டு இருந்தார். நான் பொதுவாக காலை ஏழு மணிக்கு முன்னதாக எழுந்ததில்லை. அப்பாவும் அம்மாவும் பலமுறை சத்தம் போட்டதின் பின்பு ஒருவாறாக ஏழு மணிக்கு நான் எழுந்தேன். காலை கடன்களை முடித்துவிட்டு , சீருடை அணிந்து பள்ளிக்கு செல்ல ஆயத்தமாகி, காலை உணவாக கோன்ஃப்லெக்சை சாபிட்டு சிறிது நேரம் தமிழ் புத்தகம் வாசித்து விட்டு 8.30 மணியளவில் பள்ளிக்கு சென்றேன். என் வீட்டிற்கும் பள்ளிக்கும் நடை தூரம் தான். பள்ளிக்கு முன்பாக உள்ள விளையாட்டு திடலுக்கு சென்று ஒரு மணித்தியாலம் ஓட்டப் பயிற்சி செய்தோம். சிறிது நேர ஓய்வுக்கு பின்பு கிரிக்கெட் விளையாடினோம். அதன் பின்பு கணித பாட வேளை. அது முடிய மதிய இடைவேளை. மதிய உணவை சாப்பிட்டு நண்பர்களுடன் விளையாடினேன். நண்பர்களுடன் பல விடயங்களை அரட்டை அடித்து கொண்டிருந்தோம்.

அதன் பின் ஆசிரியர் பாட பகுதிகளை கற்பித்தார். பாடம் முடியவும் மணி ஒலித்தது. எனது புத்தகப்பையை தூக்கி கொண்டு வீடு சென்றேன். உடை மாற்றிக்கொண்டு கை, கால், முகம் கழுவிக் கொண்டு தின்பண்டங்களை எடுத்துக்கொண்டு தொலைக் காட்சி முன் அமர்ந்தேன். எனது பெற்றோரும் வேலை முடிந்து வீடு திரும்பினர். நான் கிரிக்கெட் பயிற்சிக்கு செல்ல தயாரானேன். அம்மா என்னை பயிற்சிக்கு அழைத்து சென்றார். நான் இரண்டு விக்கட்டுகளை சாய்த்தேன். எனது பயிற்சியாளர் என்னை ஊக்கப்படுத்தினார். மாலை 7 மணியளவில் பயிற்சி முடிந்து வீடு திரும்பினேன். குளித்துவிட்டு வீடு பாடம் படித்தேன். அதற்குள் இரவு உணவு உண்ணும் வேளை வந்து விட்டது. அம்மா அழைக்கவும் குடும்பத்தோடு அமர்ந்து உணவை உண்டோம். அன்றைய தினம் நடந்தவை பற்றி உரையாடினோம். பின்னர் புத்தகம் வாசித்து கொண்டே உறங்கி விட்டேன். அன்றைய பொழுது இனிதாக முடிந்தது. இறைவனுக்கு நன்றி.

## சிறுவர்கள் தமிழ் கற்க வேண்டியதன் அவசியம்!


-ஹரிஷ்ணி சதீஸ்வரன்-

*சிறுவர்கள் எங்களின் தமிழ் மொழியை அவசியமாக கற்க வேண்டும். தமிழ், நமது தாய் மொழி, ஆனால் நாங்கள் வாழும் நாடு அவுஸ்ரேலியா, அதனால் நாங்கள் எதற்காக படிக்க வேண்டும்?*

*பெரியோர்கள் கதைக்கும் போது சிறுவர்களால் புரிந்து கொள்ள முடியாது.அதனால் முக்கியமான செய்திகளை தெரிந்து கொள்ள முடியாது.சிறுவர்கள் வேறொரு மொழியை கற்பது எதிர்காலத்துக்கு உபயோகமானது. இதனால் சிறுவர்கள் தமிழை கற்பது அவசியமாகும்.*



# பறவைகள்



உலகில் பலவிதமான பறவைகள் உள்ளன. சிறிய சிட்டுக்குருவி முதல் பெரிய தீக்கோழி வரை இவை காணப்படும். பறவைகள் சிறகுகளின் உதவியால் பறக்கின்றன. கோழி, பென்குயின் போன்ற பறவைகளால் பறக்க முடியாது. பறவைகள் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும். ஆனால் வௌவால் ஒரு முலையூட்டி ஆகும். பறவைகள் மரப்பொந்துகளிலும் கூடுகளிலும் வாழும்.



அங்கயன்
வயது - 6

## பெற்றோருடைய எதிர்பார்ப்பே அவர்களின் ஏமாற்றம்..

-துவிஜன் பசுபதிதசன்-


எதிர்பார்ப்பு என்பது இவ்வுலகில் அனைவருக்கும் இருக்கக்கூடிய விடயம், எதிர்பார்ப்பு என்று இதைக்கூறினாலும், உண்மையில் எமது கனவுகளுக்கும் ஆசைகளுக்காகவும் நமது மனதில் உருவாக்கிக்கொள்ளும் நம்பிக்கை ஆகும். இத்தகைய எதிர்பார்ப்பு, நம்பிக்கை என்ற போதையை கொடுத்து வாழ்க்கை எனும் ஓட்டத்தில் நாம் களைப்படையும் போது வேகத்தை கொடுத்து உற்சாகத்துடன் ஓடவைக்கும் கருவியாக அமைகிறது. ஆயினும் பெற்றோர்கள் இவ்வாறான எதிர்பார்ப்பை பிள்ளைகள் மீது திணிக்கும் போது அந்த எதிர்பார்ப்பை பிள்ளைகள் பூர்த்தி செய்ய தவறும் போது ஏமாற்றம் அடைகிறனர். 'நீர்' இயற்கையின் கொடையான போதும் அதை சில சமயங்களில் கட்டுப்படுத்த முடிவதில்லை. அதே போல் பெற்றோர்கள் பிள்ளைகள் மீது அளவு கடந்த எதிர்பார்ப்பை வைத்து ஏமாந்து போவதுக்கு பிள்ளைகள் பொறுப்பாக முடியுமா?

'காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு' என்ற பழமொழி போல் ஒருவர் தான் இறக்கும் போதும் தனது அடையாளமாக ஒரு வாரிசு பிறகும் போதும் அது புத்திசாலியாகவும், கெட்டிக்காரனாகவும் வரவேண்டும் என்ற ஆசை ஒவ்வொரு பெற்றோருக்கும் உண்டு. அதேபோல் சிறுவயதில் பிள்ளைகள் பாடசாலையில் பரிசு பெற்றாலோ, நன்றாக படித்தாலோ தனது குழந்தை வளர்ந்து பெரியவனாகி தனது கனவை நனவாக்கி விடும் என்ற எதிர்பார்ப்பு வந்துவிடும். அது நிறைவேறாமல் போகும்போது ஏமாந்து போகிறனர். விளையும் பயிரை முளையிலேயே தெரியும் என்பது போல் தம் பிள்ளை சாதிக்க வேண்டுமென எதிர்பார்க்கும் பெற்றோர் அதற்கான அங்கீகாரத்தை தங்கள் பிள்ளைகளுக்கு கொடுப்பதில்லை. பிள்ளைக்கு பிடித்த துறையில் ஊக்கப்படுத்தாமல் அவர்களது வாழ்க்கை பாதையை தேர்ந்தெடுக்க சுதந்திரம் கொடுக்காமல் பிள்ளைகளுக்கு விருப்பம் இல்லாத பாதையில் தள்ளி விடுகின்றனர். தனது சொந்த பாதையை தேர்ந்தெடுக்க சுதந்திரம் இல்லாத பிள்ளைகள் என்ன சாதனை படைக்கப் போகிறார்கள்? இது ஏமாற்றத்துக்கல்லவா வித்திடுகிறது! ஒவ்வொரு பிள்ளைக்கும் தனிப்பட்ட திறமை இருக்கிறது என்று ஆசிரியர்கள் எடுத்துச்சொல்கின்ற போதும் பெற்றோர்கள் கௌரவத்துக்கும் மரியாதைக்கும் அந்தஸ்துக்கும் ஏற்றவாறு அந்த பிள்ளைகளின் சாதனை இருக்க வேண்டும் என் எண்ணுவது தவறாகும். அனைவரும் இன்பம் என்ற ஒன்றையே நோக்கி போகிறோம். பெற்றோர்களும் தமது குழந்தைகளுக்கு அதையே கொடுக்க ஆசைப்படுகிறார்கள். ஆனாலும் பிள்ளைகளின் எதிர்காலம் நன்றாக இருக்க வேண்டும் என ஆசைப்பட்டு இயந்திரங்களைப்போல் படிக்க வைக்கிறார்கள்.

கல்வி, செல்வம், வீரம் போன்ற விடயங்களே மனநிம்மதியை தருகிறது.

சிறுவயதிலேயே இயந்திர வாழ்க்கைக்கு உட்படுவதால் நிம்மதி என்னும் இன்பம் துன்பத்தில் கரைந்து விடுகிறது. வாழும் வாழ்க்கையை விட ஆதிவாசி வாழ்க்கையே சிறந்தது என நினைக்க தோன்றும். எத்தனையோ உயிர்கள் தோன்றினாலும் இவ்வுலகில் ஒரு மகாத்மா காந்தி, ஒரேயொரு நெல்சன் மண்டேலா தான் இருக்கமுடியும். ஒவ்வொரு மனிதருக்குள்ளும் தனித்திறமை இருக்கிறது. அந்த திறமை மூலம் பெற்றோர் புகழ் பெறலாம் என எதிர்பார்ப்பது தவறாகும். எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது, எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது, எது நடக்குமோ அதுவும் நன்றாகவே நடக்கும் என பிள்ளைகள் மீது எதிர்பார்ப்பை குறைத்து கிடைத்ததை எண்ணி நிம்மதியாக வாழ்வதே சிறந்தது.

## மழலைத் தமிழ்



சொல்ல வாய் நீ திறந்து

செந்தமிழை நீ உரைக்க

சேராதோ உதடென்று

விழி தேடுதே..........

தரை மீது நீ தவழ்ந்து

தமிழ் எழுதி நீ பழக

தழுவாதோ விரல் என்று

மனம் ஏங்குதே....

துள்ளி நீ திரிந்து

தெள்ளு தமிழ் பாடி வர

அள்ளி நான் பருக

காற்றிரையும் திசையெல்லாம்

காதிரெண்டும் போகுதடி...

ஆவூரான்.

# பூ

அழகான பூக்கள்
எங்கும் பூக்கும் பூக்கள்
வண்ண வண்ண நிறங்கள்
பச்சை, நீலம்,மஞ்சள்

தருவோம் இறைவனுக்கே
வளர்போம் அன்புடனே!
பார்போம் சந்தோசமாகவே
பறிப்போம் நன்மதிப்புடனே!

பட்டாம் பூச்சிகள் பறந்து
உன்னோடு மகிழ்வார்கள்!
மனிதர்கள் உன்னை பார்த்து
நன்றாக பாராட்டுவார்கள்!

புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை,
நீ பூப்பாய்!
ஆனி, ஆடி, ஆவணி
நீ உதிர்வாய் !

–கெ.பிரியங்கா–

## சுத்தம் சுகம் தரும்!

-வைஷ்ணவி சிவா-

சுகாதாரம் நம் வாழ்க்கை முறையில் ஒரு முக்கிய பகுதியாக இருக்கிறது. ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறை மிகவும் ஆபத்தானது. எமது அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் பற்களை நன்றாக துலக்க வேண்டும். துலக்காவிட்டால் உணவுப்பொருட்கள் பற்களிடையே போய் தங்கி பற்களுக்கும் முரசுக்கும் கேடு விளைவிக்கும். தினமும் குளித்தல் உடலை சுத்தமாக வைத்திருக்க உதவும், அத்துடன் புத்துணர்ச்சி ஏற்படும்.

நீங்கள் சாப்பிட முன் உங்கள் கைகளை கழுவ வேண்டும், ஏனென்றால், கைகளிலுள்ள அழுக்கு உணவோடு சேர்ந்து நோய்களை விளைவிக்கும். நீண்டகால ஆரோக்கியத்துக்கு சத்தான உணவுகளை உண்ண வேண்டும். இது ஆரோக்கிய வாழ்வுக்கு வழி வைக்கும். ஆடைகளை அடிக்கடி துவைத்து பயன்படுத்துவது மிகவும் நன்று. சமைக்கும் பாத்திரங்களை சுத்தமாக கழுவிய பின்னரே பயன்படுத்த வேண்டும். பருகும் நீரும் தூய்மையான பாத்திரத்தில் நிரப்பி வைக்க வேண்டும். அத்துடன் உணவுப்பொருட்களை மூடி வைக்க வேண்டும்.

சிறு வயது முதல் இயன்றவரை சுகாதாரமான வாழ்க்கை வாழ வேண்டும். இதன் மூலம் ஆரோக்கியமாக வாழலாம்.

## எனது விருப்பமான நபர்

-நிவாசன் தயாபரன்-

*எனது விருப்பமான நபர் எனது அம்மா. எனது அம்மாவின் பெயர் சுலோசனா.அம்மா எனக்கு பலவிதமான உணவுப்பண்டங்கள் சமைத்து தருவார். என்னையும் எனது தம்பி, தங்கையரையும் கவனமாக பார்த்துக்கொள்வார். கூடியவரை அன்பாக நடந்துகொள்ளும் அம்மா நாம் தப்பு செய்தால் கண்டிக்கவும் செய்வார். அப்பா என்னை கண்டித்தாலும் அம்மா எனக்காக பரிந்து பேசுவார். இதனால் தான் எனது அம்மாவை எனக்கு மிகவும் பிடிக்கும்.*

## நட்பு..



-மாதுமை கோணேஸ்வரன்-

*"முக நக நட்பது நட்பு அன்று நெஞ்சத்து*

*அகநக நட்பது நட்பு"*

என்கிறார் தெய்வப்புலவர். எமது வாழ்வில் எமக்கு பல உறவுகள் ஏற்படலாம். சிலவற்றை நாம் தெரிந்து எடுக்கிறோம். சில எமக்கு இறைவனால் தரப்படுகின்றன. இந்த இரண்டிலும் எல்லாமே மகிழ்ச்சியாக அமைவதில்லை. அனால் சில உறவுகள் எம்முடன் நீண்ட காலத்திற்கு வருகின்றன. எமக்கு இன்பம் வரும் போது தாமும் மகிழ்ந்து, துன்பம் வரும் போது துன்பத்தில் பங்கு கொண்டு ஆறுதல் கூறி நாம் அழுவதற்கு தோள் கொடுத்து எம்மை தட்டிக்கொடுத்து முன்னேற வைக்கும் உறவுகளில் ஒன்று தான் நட்பு.

நல்ல நண்பனை தேர்ந்தெடுப்பது கடினம். ஆனால் நல்ல நண்பன் அமைந்துவிட்டால் அதுவே வாழ்வில் சுவர்க்கம். எமக்கு கஷ்டம் வரும் போது கை கொடுத்தல், நாம் இல்லாத இடங்களில் நம்மைப்பற்றி நல்ல விதமாக கூறல் , பிறர் நம்மை பற்றி தவறாக பேசும் போது , அதைத் தடுத்துப் பேசல் போன்ற குணங்களை உடையவனே 'நல்ல நண்பன்' என்று கவிஞர் கண்ணதாசன் தனது அர்த்தமுள்ள இந்துமதம் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். மேலும் எமக்கு கிடைக்கின்ற நண்பன் பனைமரம் போல இருக்க வேண்டும். பனைமரம் யாராலும் நட்டுவைகப்பட்டதல்ல. அது தானாகவே வளர்கிறது. தனது உடம்பையும் ஓலையையும் நுங்கையும் அது உலகத்திற்கு தருகிறது. நம்மிடத்தில் எந்த உதவியையும் எதிர் பாராமல் நமக்கு உதபுவனே நல்ல நண்பன்.

நட்பு என்பது இரு உடல்களில் உறைந்துள்ள ஓர் இதயம் என்கிறார் சோக்கிரட்டீஸ். நாம் செய்யும் வேலைகளுக்கு ஆதரவாக இருக்க, எம்முடன் எப்போதும் இருந்து எம்மை நல்ல வழியில் கொண்டு செல்ல நண்பர்கள் அவசியம். நாம் எல்லா விடயங்களையும் மனம் விட்டுப் பேசும் ஒரு உன்னதமான உறவே நட்பு ஆகும். 'தாயோடு சில தயக்கங்கள் இருக்கும்,; தோழமையில் அது கிடையாது' என்று கவிஞர் நா. முத்துக்குமார் தனது பாடல் வரிகளில் குறிப்பிட்டுளார். அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம் என்பது பழமொழி. எமக்கு துன்பம் வரும் போது எம்மை விட்டு நீங்காமல் இருப்பவரே உண்மையான நண்பர்கள். இதையே ஔவையார் இவ்வாறு குறிப்பிட்டுளார்

**"அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்**

**உற்றுழித் தீர்வார் உறவு அல்லர் – அக்குளத்தில்**

**கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே**

**ஒட்டி உறவார் உறவு."**

'வாழ வைப்பான் இறைவன், வாழத் தெரிந்தவன் மனிதன், விழ வைப்பன் துரோகி, தூக்கி விடுபவன் நண்பன்' என்பதற்கிணங்க நாம் மனமுடைந்து போகும் சந்தர்பங்களிலும் நாம் தோல்வி அடையும் போதும் நம்மை ஊக்குவித்து வெற்றி படிகளில் கொண்டு செல்ல ஒரு நல்ல நண்பன் அவசியம். நல்ல நண்பன் எப்போதும் பொறாமைப்பட மாட்டான். எம் வெற்றிகளை தன் வெற்றிகளாக கருதுவான். இப்படியான நண்பன் அமைந்தால் வாழ்வில் என்றும் வசந்தம் தான்.

உறவினர்களைத் தெரிவு செய்ய முடியாது. ஆனால் நண்பர்களைத் தெரிவு செய்ய முடியும். பல நல்ல நண்பர்கள் ஒன்று சேர்ந்தால் சமூகத்திற்கு நல்ல உதவிகளைச் செய்ய முடியும். நல்ல நட்பு குடும்ப நட்பாக மாறும் சந்தர்பங்கள் பல இடம்பெற்றுள்ளன. ஒரு வீட்டில் நடக்கும் வைபவங்களில், அவ்வீட்டு அங்கத்தவர்களின் குடும்பங்களின் நண்பர்களால் பல உதவிகள் கிடைக்கின்றன.

கௌரவர்கள் கர்ணனிடம் பாராடிய நட்புக்காக அவர்கள் செய்த உதவிக்காக, போர்களததில் தன் சகோதரர்களையே எதிர்த்தான் என்று மகாபாரதம் கூறுகின்றது. நட்பும், செஞ்சோற்றுக் கடன் கழித்து நன்றி சொல்வதும் எம் மரபு. நாம் எம் நண்பர்களுக்காக உயிரையும் கொடுப்பவர்களாக இருக்கலாம், ஆனால், அதனைக் கேட்காதவர்களே உண்மையான நண்பர்கள்.

இருட்டில் வெளிச்சம் தரும் மெழுதுவர்த்தி போன்றது நட்பு. நண்பனுக்காக நாம் எதையும் விட்டுக்கொடுக்கலாம். ஆனால் யாருக்காவும் நாம் நண்பனை விட்டுக் கொடுக்க கூடாது. அதேவேனளயில் நட்பு உலகத்தில் புகுந்து விட்டால் குடும்பத்தை மறக்கக் கூடாது. நல்ல நட்பானது ஒருவனை நல்ல வழிலேயே இட்டுச் செல்லும். அது நல்ல குடும்பத்திற்க்கு சார்பானதாகவே எப்போதும் அமைந்து இருக்கும். நட்பிற்கென வகுக்கப்பட்ட குணங்களான விட்டுக்கொடுத்தல், உதவு செய்தல், நன்றி உணர்வு, உண்மை பேசுதல், நம்புதல், நம்பிகை வைத்தல், ஏமாற்றாமை, இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொள்ளல் போன்ற குணங்கள் எல்லா நண்பர்களிடமும் இருக்குமாயின் அவர்களது நட்பு என்றும் நிலைத்திருக்கும்.

## ஊருக்குப் போகும் ஆசை..

-அபிதாரணி சந்திரன்-

காலையில் நான் சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தேன். 'அபி எழும்பலாம், நாங்கள் கடைக்குச் சென்று ஊருக்குப் போகும்போது கொண்டுபோக வேண்டிய பொருட்கள் எல்லாம் வாங்க வேண்டும்.' என்று ஒரு குரல் என் அருகில் கேட்டது.

'ஆ..... அம்...மா இன்னும் ஏழு நாட்கள் இருக்குத் தானே, மூன்று நாட்கள் இருக்கும் போது வாங்கலாம் தானே' என்று நான் கூறிவிட்டு மீண்டும் தூக்கத்திற்குப் போனேன். 'சரி 10 நிமிடத்தால் எழும்பிவிட வேண்டும்' என்று அம்மா சொல்லி விட்டுச் சென்றார்.

என்னை அம்மா எழுப்பியதால் என் தூக்கம் கலைந்து பழைய நினைவுகள் வந்து என்னைத் தூங்க விடாமல் செய்தது. ஆம் அம்மா அடிக்கடி சொல்லுவா இலங்கை மிகவும் அழகான நாடு என்றும், பிரச்சனைகள் எதுவும் இல்லை என்றால் அங்கு சந்தோசமாக எல்லா சொந்தங்களுடனும் வாழ்ந்திருக்கலாம் என்றும்..

ஆ... இன்னமும் சரியாக 5 நாட்கள் தான் இருக்கிறது. அங்குள்ள அழகான இடங்கள், கோயில்கள், மிருகக் காட்சிச் சாலைகள், நூல் நிலையம் என்று பல இடங்களைப் பார்க்கலாம். அம்மம்மா, ஊரம்மம்மா, பெரியம்மாக்கள், பெரியப்பாக்கள், ஆசை அண்ணாமார்கள், அக்காமார்கள், மச்சான்மார்கள், மச்சாள்மார்கள் இப்படியாக நிறையச் சொந்தக்காரைகளைப் பார்க்கலாம்.

ஆனால் நாங்கள் 6 வருடங்களின் முன்பு தாத்தாவின் இறந்த செய்தி கேட்டுப் போனோம். அப்போது இராணுவத்தினர் வீடுகளை எல்லாம் சுத்தி நின்றனர். எங்கு பார்த்தாலும் இராணுவத்தினர். எனக்கு அப்போது அவர்களைப் பார்க்கும் போது சரியான பயமாக இருந்தது. வீடுகள் கட்டடங்கள் எல்லாம் உடைந்து கிடந்தது, மக்கள் எல்லோரும் பல இழப்புகளைச் சந்தித்து கவலையோடு இருந்த காலம். அப்போது கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்த போது அண்ணாக்கள் பெரியம்மா எல்லோரும் அங்கு நடந்த பேரவலங்களையும் இராணுவத்தினர் செய்த கொடுமைகளையும் வழிவழியே சொல்லிக் கொண்டுவந்தார்கள். அதனால் தான் ஆமியைப் பார்த்துப் பயந்தேன்.

எனக்கு இங்கு இந்த முறை கேசி தமிழ் மன்றத்தின் பொங்கல் விழாவிற்கு நாங்கள் நிற்க முடியாததும், அதில் நடைபெறும் தரமான நிகழ்ச்சிகளைப் பார்க்கவும் பங்கு பற்றவும் முடியாமல் போகிறதே என்பதும் கவலை. அதை விட மிகப் பெரிய கவலை நாங்கள் அப்பாவை இங்கு விட்டுச் செல்வது தான்.



ஆகாஸ் சுரேஸ்

# இன்றைய வாழ்க்கைச் சூழலில் தனிக் குடும்ப வாழ்வா அல்லது கூட்டுக் குடும்ப வாழ்வா நன்மை தரும்.

-துவாரகன் சந்திரன்-

ஒரு சமூகத்தின் அடிப்படை அலகு என்பது குடும்பம் என்கின்ற அமைப்பு. குடும்பம் என்பது இரத்த உறவாகவோ, அல்லது திருமணம், தத்தெடுத்தல் போன்ற சட்டபூர்வமான முறைகளினாலோ தொடர்பு பட்ட ஒரு உறைவிடக் குழுவாகும்.

கணவன் மனைவி, அவர்களுடைய பிள்ளைகள், பிள்ளைகளுடைய மனைவிமார்கள், கணவன்மார்கள் அவர்களுடைய பிள்ளைகள் என எல்லோரும் ஒரே வீட்டில் வாழ முற்படும் போது கூட்டுக்குடும்பம் தோன்றுகின்றது. கணவனும் மனைவியும் தங்கள் பிள்ளைகளுடன் மட்டும் ஒன்றாக வாழ்கின்ற குடும்பமே தனிக்குடும்பம் எனப்படுகிறது.

கடந்த காலங்களில் கூட்டுக்குடும்ப வாழ்க்கை பல இடங்களில் குறிப்பாக இலங்கை இந்தியா போன்ற தமிழர்கள் வாழும் நாடுகளில் மிகவும் சிறப்பாக இருந்தது, அதாவது குடும்பப் பெண்கள் பலரும் ஒன்று கூடி வீட்டு வேலைகளைக் கவனித்து, மாலை வேளைகளில் வீடுகளில் அமர்ந்து கதை பேசி பொழுதைக் கழிப்பார்கள். குழந்தைகள் வீதிகளில் ஒன்று கூடி விளையாடுவார்கள். இதனால் சிறுவர்களுக்கு வெற்றி தோல்வியை ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை, விட்டுக்க்கொடுக்கும் தன்மை, புரிந்து கொள்ளும் இயல்பு என்பன ஏற்படுகின்றன.

ஆனால் தற்போதைய நாகரிக மாற்றத்தினாலும், வேலைப் பளுக்களினாலும் குடும்பங்கள் திசைமாறி வேகச் சூழலில் சிக்கிக் கொள்ளுகின்றது. இதன் காரணமாக குடும்பத்தில் உள்ளவர்கள் தமது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு அமைவாக குடும்பத்துடன் சேர்ந்து வாழ்வதா தனிக்குடித்தனம் போவதா என்ற குழப்ப நிலையில் இருந்தாலும் தமது எதிர்கால சந்ததியினருக்கு எமது பாரம்பரிய முறைகளை வெளிப்படுத்துவதற்கு கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறைக்குள் செல்கிறார்கள்.

ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து புரிந்துணர்வுடன் ஒற்றுமையாக செயற்பட்டு வாழ்ந்து வந்தால் கூட்டுக் குடும்ப வாழ்க்கை சிறப்பாக அமையும். வளர்ந்துவரும் பிள்ளைகளுக்கு சொந்த பந்தங்கள் எப்படியான உறவு முறையில் இருக்கிறார்கள் என்பதை இலகுவில் புரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. எனவே தனிக்குடும்ப வாழ்க்கை முறையை விட கூட்டுக் குடும்ப வாழ்கை முறையே தற்காலத்திற்குப் பொருத்தமானது என்பது எனது கருத்து.

## இணையம்

-வெண்ணிலா-

பல வருடங்களுக்கு முன்பு இணையம் இந்த உலகிற்கு அறிமுகமாகவில்லை. இன்று இணையம் ஒரு முக்கியமான பொருளாக இந்த உலகிற்கு விளங்கிகொண்டிருகிறது. கூடிய அனைத்து தொழில்களுக்கும் இணையம் ஒரு முக்கியமான கருவியாக விளங்கிகொண்டிருக்கிறது. மாணவர்களின் கல்விக்கும் மிக உதவியாக இருக்கிறது. இதன் மூலம் கூடிய மாணவர்கள் கல்விக்கு தேவையான எல்லாவற்றையும் அறிந்து கொள்கிறார்கள். நாடு விட்டு நாடு உறவினர்களுடன் முகம் பார்த்து பேசும் தொடர்புகளும் இதனால் ஏற்பட்டுள்ளது.

இணையம் மக்களுக்கு உதவியாகவும் உள்ளது. பல வகையில் போக்குவரத்துக்கும் உதவியாக உள்ளது. தெரியாத இடங்களுக்கு செல்ல பாதையும் காட்டிக்கொடுக்கிறது. வழிமாறிச்சென்றாலும் இணையத்தின் உதவியுடன் வீடு வர முடியும். வியாபரக்கொடுக்கல் வாங்கல்களும் இதன் மூலம் இலகுவாக மேற்கொள்ள முடியும். குறைந்த விலைக்கு தரமான பொருட்கள் வாங்க முடியும்.

புகைப்படங்கள், காணொளிகளை உறவினர்களுக்கு அனுப்பவும் முடியும். தெரியாத பல விடயங்களை அறிந்து கொள்ள இணையம் பேருதவியாக உள்ளது. ஆனால் பல பிரதிகூலங்கலும் இணையத்தால் ஏற்படுவதால் நல்லது எது கேட்டது எது என ஆராய்ந்து பயன்படுத்துவதால் நன்மைகளை பெறலாம்

மற்றும் பல வழிகளில் இணையம் தீமையும் பயக்கிறது. கூடுதலான நேரம் பயன்படுத்துவதால் கண்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. அதிகமாக பாடல்கள் செவிமடுப்பதால் காதிற்கும் பாதிப்பு ஏற்படுகிறது. பெற்றோர் தமது பிள்ளைகள் இணையம் பயன்படுத்துவது தவறு என சாடுகிறனர், ஏனெனில் இதன் மூலம் அவர்கள் பல பிரச்சனைகளுக்கு உள்ளகிறனர். அதனால் சிறுவர்கள் இணையம் பாவிப்பது மிகவும் ஆபத்தாகும். மற்றும் சில மாணவர்கள் பாடசாலையில் பாட நேரங்களிலும் இணையத்தில் தமது நேரத்தை செலவிடுகிறனர். இதனால் கல்வி மீது அக்கறை குறைந்து போகிறது.

## யேசு பாலன் பிறந்த நாள்.. கவலைகள் மறந்த நாள்..

-பரமேஸ்வரி சச்சிதானந்தம் & சச்சி. சிவானந்தகுமார்-

*மார்கழி மாதத்தில் மகிழ்ச்சி பொங்கி வழிகிறது*

*கார்காலம் முடிந்துவிடும், கருமுகில்கள் மறைந்துவிடும்*

*கதிரவனும் ஒளி வீசிக் களிப்போடு உலா வருவான்*

*பாரெங்கும் புல் தெரியும் பசுமை நிறைந்திருக்கும்*

*குருகினங்கள் கூர்வாயால் சிறகுலர்த்திக் கூச்சலிடும்*

*ஆனினங்கள் பசும்புல்லில் பசி ஆறிப் படுத்துறங்கும்*

*மனிதர்கள் மகிழ்ச்சியுடன் ஓய்வின்றி வேலை செய்வர்*

*தெய்வமகன் யேசுபிரான் மார்கழியில் அவதரித்தார்*

*யேசுபிரான் பிறந்த புண்ணியத்தால் பெருமை பெற்றது மார்கழி மாதம்*

*மாட்டுத் தொழுவமே தேவன் பிறந்த இடம்*

*மந்தைகளை மேய்த்தவர்கள் ஒளி கண்டு வியந்தனர்*

*ஒளிவழி நாடி ஓடி வந்தார் அரசர் மூவர்*

*பொன்னும் பொருளும் கொணர்ந்து கொடுத்து மகிழ்ந்தனர்*

*ஏழையாய் வாழ்ந்தார் யேசு ஏழைகளுக்காய் வாழ்ந்தார்*

*உழவுத்தொழில் விருத்திக்காய் இயன்றவரை பாடுபட்டார்*

*அளவான வருவாயில் அதிக திருப்தி கண்டார்*

*அற்புதங்கள் பல செய்தார் அண்டினோரை ஆதரித்தார்*

*''ஞான ஒளி'' வீசி நானிலம் போற்ற வாழ்ந்தார்*

*''மன்னிப்பு'' என்ற சொல்லை மானிடம் உணர வைத்தார்*

*''ஒரு கன்னம் அடிபட்டால் மறு கன்னம் கொடு'' என்றார்*

*''அயலானை நேசி'' என்றார், அன்பே வடிவாகி நின்றார்*

*போதனைகள் போதித்தார், வேதனைகள் பல அடைந்தார்*

*சீடர் பலர் பின் தொடர்ந்தார், மூடர் பலர் குழி பறித்தார்*

*கட்டிப் பிடித்தொருவன் அவரைக் காட்டிக்கொடுத்தான்*

*சிலுவை சுமந்து சென்றார், மனிதருக்காய் மரணித்தார்*

*அழியா வரம் பெற்றார், அனைவர் உள்ளத்திலும் இடம் பெற்றார்*

*தெய்வமாய் போற்றப்பட்டார், தேவாலயங்கள் தோன்றின*

*அன்னை மரியாளும் தெய்வீகத் தன்மை பெற்றார்*

*யேசு பாலன் பிறந்தது மார்கழி இருபத்தைந்தாம் நாள்*

*மனித குலத்தை மகிழ்ச்சியில் ஆழ்த்தும் நாள்*

*மார்கழி முதல் நாளே ''கொண்டாட்டம்'' தொடங்கிவிடும்*

*மின் குமிழ் நிறைந்த ''Christmas tree'' வீடுகளை அலங்கரிக்கும்*

*சாலைகள் தோறும் மின் விளக்கு ''மின்னி மின்னி'' ஒளி வீசும்*

*வானத்தில் தாரகைகள் வெட்கித் தலை குனியும்*

*வனப்பூட்டும் வண்ண ஒளி வழி எங்கும் வரவேற்கும்*

*வியத்தகு வகையில் வியாபாரம் நடந்தேறும்*

*அழகான பொருட்கள் அனைவரையும் மகிழ்விக்கும்*

*எண்ணிலடங்கா எழிலான பொம்மைகள்,*

*வண்ண நிறங்களில் வடிவான உடைகள்,*

*எல்லாமே விலை போகும் முகமும் மலர்ந்துவிடும்*

*சுறு சுறுப்பாய் வேலைகள் சுகமாக முடிந்துவிடும்*

*வகை வகையாய் உணவுகள் வந்தோரின் பசி தீர்க்கும்*

*சிறுவர்களை மகிழ்விக்க ''சான்ரா'' வந்து நிற்பார்*

*பரிசில்கள் பல கொடுப்பார், படமும் எடுத்திடுவார்.*

*வீடுகளில் ''கொண்டாட்டம்'' உச்சநிலை அடைந்துவிடும்*

*ஆடல் பாடல் குறைவின்றி நடந்தேறும்*

*மார்கழி மாதம் மகிழ்ச்சிக்குரியதாய்ப் போற்றப்படுகிறது*

*''பரிசில்கள் திறப்பது'' அது கூட பெரு நிகழ்வு*

*பண்டிகை நாட்களில் உறவுகள் வருவார்கள்*

*உணவு வகைகள் உண்டு மகிழலாம்*

*நலம் விசாரித்து நட்புறவை வளர்க்கலாம்*

*பரிசில்கள் பரிமாறிப் பண்பாட்டை வளர்க்கலாம்*

*பல்லாண்டு காலமாய் இறைவனைத் தேடுகிறார்கள்*

*பாமரர் இயற்கையில் கண்டார், ஞானிகள் இதயத்தில் கண்டார்*

*''இல்லை'' என்று சொன்னார் சிலர், இருளில் வாழ்ந்தார்*

*''இறைவன் எங்கும் இருக்கின்றார்'' என்றார் நாவலர் பெருமான்*

*பண்ணிசையில் பாடிக் காட்டினார்கள் ''தேவார முதலிகள்''*

*யேசுபிரான் எப்படி இறைவனைக் காட்டினார்*

*''கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்,*

*தேடுங்கள் கிடைக்கும்'' என்றார்*

*தெளிவான முறையில் தெரியப்படுத்தினார்*

*மன்னிக்கத் தெரிந்த உள்ளத்தை ஆலயமாக்க் காட்டினார்*

*கவலை கொடுத்த சிலுவை, கவலை போக்கிய தெய்வீகச் சின்னமாக மாறியது*

*கன்னி மரியாள் அன்னை மரியாளாய் ஆசீர்வதித்தார்*

*அன்னைக்குத் தேவாலயங்கள் எழுந்தன*

*மன்னார் மடுமாதா, வேளாங்கன்னிமாதா, இன்று*

*எல்லோரும் வணங்கும் சக்தி பீடங்கள்*

*வருடம் ஒன்று கழிந்தால் வயதொன்று போகும்*

*வயதொன்று போனால் முதுமை தொடர்ந்து வரும்*

*வறுமை வரும், செழுமை வரும், மாறி மாறி வரும்*

*கவலை போக்குதற்குப் பண்டிகைகள் அவசியம்*

*நத்தார் பண்டிகையை, வரவேற்போம், கொண்டாடுவோம்*

*இன்று வெள்ளத்தில் அலைந்து கண்ணீர் விட்டழும்*

*உறவுகளுக்காக இறைவனைப் பிரார்த்திப்போம்*

*அவர்களையும் வாழவைப்போம்...*

# பிள்ளையார்

-கீர்த்திகன் சீவராஜா-

ஒருநாள் சிவபெருமான் எல்லா உயிர்களுக்கும் உணவு கொடுக்க சென்ற நேரம், பார்வதி தேவியார் தனது மாளிகைக்கு உள்ளே யாரையும் அனுமதிக்க வேண்டாம் என்று நந்தியை வாசலில் காவல் காக்க நிற்கவைத்து உள்ளே நீராட சென்றார். நந்தியும், பார்வதி தேவியாரின் சொல்லை கேட்டு காவல் நின்றது. சில நிமிடத்திற்கு பிறகு, சிவபெருமான் அவருடைய மாளிகைக்கு வந்தார். அந்த நேரம் நந்தி, சிவபெருமான் அவருடைய மாளிகைக்கு செல்ல அனுமதி உண்டு என நினைத்து அவரை உள்ளே செல்ல அனுமதி கொடுத்தது. உள்ளே சென்ற சிவபெருமான், பார்வதி தேவியார் நீராடுவதை கண்டார். பார்வதி தேவியாரோ சிவபெருமானை கண்டதும் பயந்து, எப்படி சிவபெருமான் உள்ளே வந்தார்? நந்தி தனது சொல்லை கேட்டு காவல் செய்யவில்லை என நினைத்தார்.

மறுநாள், தனது சில நண்பிகளுடன் பேசி என்ன செய்யலாம் என்று ஆலோசனை கேட்டார். அதற்கு அவருடைய நண்பிகளில் ஒருவர், 'நீ, உனக்கு என்று காவலாளி ஒருவனை உருவாக்கினால் நல்லது,' என்று சொன்னார். அவரின் ஆலோசனையை கேட்டு, பார்வதி தேவியார் மாளிகைக்கு சென்றார்.

மாளிகைக்கு சென்றதும், தனது உடலில் இருந்த குங்குமப்பூப்பசையை எடுத்து ஒரு சிறுவனைப் போன்ற சிலையை உருவாக்கினார். அந்த சிலை, மிக அழகாக இருந்தது. அதற்கு உயிர் கொடுத்து ஆசீர்வதித்து அவனை காவலாளியாக நிற்கவைத்து 'நீ இங்கே நின்று யாரையும் உள்ளே அனுமதிக்காமல் மாளிகையை பாதுகாக்கவேண்டும்,' என்று சொல்லி கதாயுதம் ஒன்றை கொடுத்தார். அந்த சிறுவனும் பார்வதி தேவியாரின் சொல்லைக்கேட்டு கதாயுதத்துடன் வாசலில் காவல் நின்றார்.

அந்த நேரம், வெளியே சென்ற சிவபெருமான் வாசலுக்கு வந்தார். அங்கே ஒரு சிறுவன் காவல் நிற்பதை கண்டார். உடனே 'நீ யார்? ஏன் நீ என் மாளிகை வாசலில் நிற்கிறாய்? தள்ளிப் போ!' என்று சொல்லி உள்ளே செல்ல முயன்றார். அதற்கு அந்த சிறுவன், 'நான் பார்வதி தேவியாரின் மகன். காவலாளியாக இங்கே நிற்கிறேன். யாரையும் உள்ளே செல்ல விடமாட்டேன்.' என்று சொல்லி சிவபெருமானை தடுத்து கதாயுதத்தினால் மோதினான். இதனால், கோபம் அடைந்த சிவபெருமான், தனது காவலர்களிடம், 'அந்த சிறுவனை அடித்து விரட்டுங்கள்!' என்று கட்டளையிட்டார்.

உடனே, அந்த காவலர்கள் சென்று அந்த சிறுவனை அடித்தார்கள். அந்த சிறுவனும் அனைவரையும் எதிர்த்து அடித்து விரட்டினான். இதனால், அங்கே பெரிய யுத்தம் உருவானது. இதை பார்த்த பிரம்ம தேவன், அந்ந சிறுவனிடம் எவரும் சண்டை செய்யாமல் சிவபெருமானை உள்ளே செல்ல அனுமதிக்குமாறு சமாதானமாக கேட்டார். அதற்கு மறுத்த சிறுவன், தன்னுடைய கதாயுதத்தினால் அனைவரையும் அடித்து விரட்டினான்.

அதற்கு பிறகு, விஷ்ணு பெருமானும் வந்து சண்டையிட்டார். அந்த நேரம், அந்த சிறுவனின் கதாயுதம் இரண்டாக உடைந்தது. அந்த நேரத்தில், பாறையின் பின்னே நின்ற

சிவபெருமான், அவருடைய சூலாயுதத்தை எறிந்து அந்த சிறுவனின் தலையை வெட்டினார்.

இந்த செய்தியை அறிந்த பார்வதி தேவியார், மிகவும் கோபம் அடைந்ததால், அங்கே பெரிய போர் நடந்தது. இதனால் பார்வதி தேவியாரின் கோபத்தை தணிப்பதற்கு நினைத்து பிரமதேவனிடம் 'நீங்கள் காட்டிற்கு போய், முதலில் காணும் மிருகத்தின் தலையை வெட்டி எடுத்துக்கொண்டு வாருங்கள்.' என்று கேட்டார். காட்டிற்கு போன பிரமதேவர், முதலில் ஒரு யானையை கண்டார். உடனே அதனுடைய தலையை வெட்டி வந்த பிரமதேவர், அந்த யானையின் தலையை எடுத்து சிறுவனின் தலையில் ஒட்டினார். உடனே சிறுவன் எழுந்து இருந்தான்.

அதன்பின், சிவபெருமான், பார்வதி தேவியாரிடம் மன்னிப்பு கேட்டு, அந்த சிறுவனை கொடுத்து 'கணேஷன்' என்ற பெயரை சூட்டினார். அவரை விக்னேஷ்வரா எனவும் எல்லோரும் அழைப்பார்கள்.

## பெற்றோர் சொல்வதெல்லாம் நமது நன்மைக்கே!

**-ஹரிஜன் பசுபதிதாசன்-**

மெல்போன் நகரத்தில் சீத்தா எனும் பெண் வசித்து வந்தாள்.அவளின் பெற்றோர்கள் அவளுக்கு நல்ல பழக்கவழக்கங்களை கற்றுத் தருவார்கள்.ஆனால், சொல்வதற்கெல்லாம் தலையை ஆட்டிவிட்டு, அவள் செய்வதெல்லாம் வேறு.

ஒரு நாள் இரவு உணவு உண்பதற்கு சீத்தா பெற்றோருடன் சேர்ந்து மேசையில் அமர்ந்தாள். அவளின் தாயார் இரவு உணவுடன் அவளுக்கு பிடித்த குலாப் ஜாமுனும் செய்திருந்தாள். எல்லோரும் உணவை உண்டு மகிழ்ந்தனர். உணவை உண்டு முடித்த சீத்தா கை கழுவச் சென்றாள். அவளிடம் தாயார் "சீத்தா கை கழுவியதும் மறக்காமல் பல் துலக்கி விட்டு நித்திரைக்குச் செல்" எனக்கூறினாள். வழக்கம் போல தலையை ஆட்டிவிட்டு சீத்தா அதைச் செய்யவில்லை.

அன்று இரவு சீத்தாவுக்கு பல் வலிக்க ஆரம்பித்தது. வலி அதிகரிக்கவும் தாங்க முடியாத சீத்தா தந்தையிடம் சென்று பல்லைக்காட்டினாள். தகப்பனார் பல் மருத்துவரிடம் அழைத்துச்சென்றார். பல்வலிக்கு மருந்து கொடுத்துவிட்டு பல்லை பரிசோதித்துப் பார்த்த மருத்துவர் பற்களில் துவாரம் இருப்பதாக கூறி, பற்களை பிடிங்கினார். வலிதாங்க முடியாத சீத்தா கத்திக்கொண்டு எழும்பினாள். அப்போதுதான் தான் கண்டது கனவு என உணர்ந்தாள்.

மறுநாள் காலையில் சீத்தா தந்தையிடம் தன்னை பல் மருத்துவரிடம் அழைத்துச்செல்லுமாறு கூறினாள். தந்தையும் அழைத்துச்சென்றார். பற்களை சுத்தம் செய்து விட்டு மருத்துவர் பற்களை நன்றாக துலக்க வேண்டுமென்றும், குறிப்பாக சாப்பிட்ட பின்னர் கண்டிப்பாக பற்களை துலக்க வேண்டுமென்று எடுத்துச்சொன்னார் . அன்றுமுதல் சீத்தா பெற்றோர் சொல்வதை தட்டாமல் செய்வாள். பெற்றோர் சொல்வதெல்லாம் நன்மைக்கே என்று புரிந்து கொண்டாள்.

## 'இதுக்குத்தான் நான் அப்பவே சொன்னேன்'



-சறணியா சத்தியன்-

**ஐந்து கரத்தனை யானை முகத்தனை**

**இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை**

**நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்**

**புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே....**

என்று கணீர் குரலில் தனது பேரன் சங்கர் சாமியறையில் பாடும் ஒலி கேட்டு நாளிதழில் புதைந்திருந்த வைத்தியலிங்கம் வியப்புடன் திரும்பினார். அவர் வீட்டின் வடக்கு சுவரை அலங்கரித்த கடிகாரம் காட்டிய ஆறு மணி எனும் நேரத்தைப் பார்த்தவரின் முகத்தில் மிகப் பெரும் ஆச்சரியக்குறி. 'என்னடா இது.... காலேல 6 மணி தான் ஆகுது, ஆன இந்த சங்கர் எழும்பி, குளிச்சு, சாமியறையில பூஜை எல்லாம் செய்யிறானே, இவனுக்கு திடீர்னு என்ன தான் ஆச்சு..' என்று குழம்பிக் கொண்டிருக்கையிலேயே பூஜை முடித்து வெளியில் வந்த சங்கரைப் பார்த்தவரின் விழிகளில் மிகப் பெரும் ஆச்சரியம். ஜெல் வைத்து களைத்துவிட்ட முடியும், காதில் இயர்போனுமாக திரியும் அவர் பேரன், காதில் பூவும் நெற்றியில் பட்டையுமாக வந்தால் அவருக்கு ஆச்சரியமாக இருக்காத என்ன. ஏற்கனவே ஆச்சரியத்தில் இருந்தவரை அதன் விளிம்பிற்கே கொண்டுசெல்லும் வகையில் அவர் காலில் விழுந்த சங்கர் 'என்னை ஆசிர்வாதம் பண்ணுங்க தாத்தா' என்றான். 'நல்லாயிருடா' என வாழ்த்தியவரின் முகத்திலோ பலவிதமான குழப்பரேகைகள். அதனை கவனிக்காது சங்கர் தனது அறையை நோக்கி சென்றான் பாடசாலைக்கு ஆயத்தமாவதற்காக.

தேனீருடன் வந்த கல்யாணி தனது மாமானாரின் குழப்ப முகத்தைப் பார்த்து 'என்ன மாமா சிந்தனை' என்று கேட்டபடியே அவர் கைகளில் காலைத் தேனீரைக் கொடுத்தார். தனது மருமகளின் கேள்வியில் நினைவுக்குத் திரும்பிய வைத்தியலிங்கம் காலையிலிருந்து சங்கர் நடந்து கொண்ட முறைகளையும் அதனால் அவருக்கு ஏற்பட்ட ஆச்சரியத்தையும் பற்றிக் கூறினார். கல்யாணியோ 'அட இவ்வளவு தானா மாமா. இது அப்பப்போ நடகிறது தான். ஆச்சரியபடுவதுக்கு எதுவும் இல்லை' என்றார். 'என்னம்மா சொல்கிறாய்' என்று மாமானார் கேட்டதுக்குக் கல்யாணி 'இன்று சங்கருக்கு 7ம் ஆண்டு இடைத் தவணை பரீட்சை மாமா. அது தான் பையன் பக்திமயமா சுத்துறான்'. 'ஓ........' என்றார் வைத்தியலிங்கம் சிந்தனையுடனே. 'அவன விடுங்க மாமா. நீங்க போய் தனுவ கொஞ்சம் எழுப்புரிங்களா. அவளுக்கும் ஸ்கூல்க்கு நேரம் ஆகுது'. சரி என்று வைத்தியலிங்கம் அவர் பேத்தியின் அறை நோக்கிச் சென்றார்.

கல்யாணி காலை நேர பரபரப்பில் சுழன்றுகொண்டிருந்தாள். வைத்தியலிங்கமும் அவளுக்கு தேவையான உதவிகளைப் புரிந்தார். எல்லோரும் காலை உணவுக்காக அமர்ந்திருக்கையில் சங்கர் ஆயத்தமாகி கையில் புத்தகத்துடன் பரபரப்பாக வெளியில் வந்தான்.

'அம்மா நான் கிளம்பிறேன். இன்னிக்கு எனக்கு எக்ஸாம். அதனால கொஞ்சம் வெள்ளனவே கிளம்பலாம்னு நேற்று ரகு சொன்னான்மா.'

'சரிடா. கிளம்பு.'

'என்னம்மா??? கிளம்புனு சொல்றிங்க.'

'வேற என்னாடா சொல்றது?'

'இன்னிக்கு எக்ஸாம்மா. என்ன விஸ் பண்ணுங்க'

'ஓ... அதுவா. ஆல் த பெஸ்ட். நல்ல படியா எக்ஸாம் எழுது. சரியா?'

'ஒகேமா. அப்பா, தாத்தா, தனு நீங்களும் சொல்லுங்க. '

எல்லோரும் வாழ்த்திய பின்னரே அவன் கிளம்பினான்.

அப்போது 'சாப்பிட்டு போயேண்டா' என்று கேட்ட தாத்தாவுக்கும் 'இல்லை தாத்தா. கடைசியா பார்க்க வேண்டிய பாடம் சிலது இருக்கு. வெள்ளனவே போனா தான் அதெல்லாம் பேப்பர் தர முதல்ல பாக்கலாம். நான் கிளம்பிறேன் தாத்தா என்று கூறி வெளியில் காத்திருந்த பக்கத்து தெருவில் வசிக்கும் அவன் நண்பன் ரகுவுடன் பாடசாலைக்குக் கிள்ம்பினான். அப்பொழுது ரகு பிருத்தானிய ஆட்சி காலம் பற்றி கேட்பதும் சங்கர் அது நான் நல்லா படிச்சிருக்கேன்டா என்று சொல்வதும் தாத்தாவின் காதில் விழுந்தது.

'என்னம்மா கல்யாணி, நீ தான் எப்பவும் இவன் நல்லா படிகிறதே இல்ல. ஒரே விளையாட்டு என்று புலம்புறாய். ஆனா அவன பாத்தா நல்லா படிக்கிற மாதிரி தான் தெரியுது. எக்ஸாம்கு எவ்வளவு அக்கறையா கிளம்புறான்.

'நீங்க வேற மாமா. இந்த ஒரு நாள் கூத்த பார்த்து அவன எடை போட்டிறாதிங்க. இவ்வளவு நாளும் வீடு, நிலம்னு ஊரிலேயே இருந்திட்டு இப்ப தானே மாமா எங்க கூட இருக்கிங்க. போக போக உங்க பேரனை பத்தி உங்களுக்கே தெரியும்.'

'இல்லம்மா. நேற்றுகூட அவன் அறையில 2 மணி வரைக்கும் விளக்கு எரிந்தத பார்த்தேன். இரவிரவா படிசிருப்பான் போல. அவன் என்னை மாதிரி கல்யாணி. விளையாட்டுப் பில்ளையா இருந்தாலும் படிப்புல கெட்டி. நீ வேணும்ணா பாரு, இந்த தடவை அவன் எல்லா பாடத்துக்கும் 80க்கு மேல மார்க் வாங்குவான்.'

'ம்....... உங்களுக்கு சொல்லி புரியாது. இன்னும் 2 வாரத்தில அவன் மார்க் எல்லாம் வந்திடும். அப்ப பார்க்கத்தானே போறிங்க மாமா.'

2 வாரத்திற்கு பின்,

வெளியில் தனது நண்பரைப் பார்க்கச் சென்ற வைத்தியலிங்கம் வீட்டினுள் நுழையும் போதே சங்கரின் 'அம்மா....................' என்று ஓங்கி ஒலித்த குரல் அவர் காதில் நாரசமாக ஒலித்தது. செருப்பைக் கழட்டி விட்டு நிமிர்ந்தவரின் முகத்தில் ஈயாடவில்லை. ஏனெனில் அவர் மகன் செல்வம் சங்கரை பிரம்பினால் விளாசிக் கொண்டிருந்தார். அவர் பேரனோ,

'ஐயோ......... அம்மா வலிக்குதே..... அப்பா... பிளீஸ் அப்பா.... அடிக்காதிங்க. ரொம்ப வலிக்குது.... அம்மா...... ' என்று அந்த தெருவிற்கே கேட்கின்ற அளவுக்கு கத்தி அழுது கொண்டிருந்தான்.

பேரனின் அழுகையை கண்டவர் பதைத்துப் போய் ஓடிச் சென்று அடிக்கின்ற மகனைத் தடுத்தார். ' என்னடா செல்வா இது. மாட்ட அடிக்கிற மாதிரி பிள்ளைய போட்டு அடிக்கிற. அவன் என்ன தான் தப்பு பண்ணினாலும் இப்பிடியா அடிக்கிறது'

'அப்பா, முதல்ல என்ன திட்டிறத விட்டுட்டு இவனோட ரிப்போட்ட பாருங்கோ' என்று கூறி சங்கரின் ரிப்போட்டை அவர் கைகளில் கொடுத்தார். அதனைப் பார்த்தவரின் முகம் அஷ்டகோணல் ஆகியது. ஏனெனில் சங்கரின் மதிப்பெண்கள் அப்படி. எதுவுமே 50ஐத் தாண்டவில்லை. மீண்டும் சங்கரின் அழுகுரல் அவரை நனவுக்கு கொண்டுவந்தது. திரும்பவும் செல்வம் சங்கரை அடிக்கத் தொடங்கியிருந்தார். சங்கரைப் பார்க்கவும் அவருக்கு பாவமாக இருந்தது. அதனால் அவர் தன் மகனிடம்,' சரி விடுடா. 7ம் ஆண்டு தானே' என்றார். செல்வமோ '7ம் ஆண்டா?? இன்னும் 4 வருசத்தில அவன் O/L. அத நினைச்சு இவனுக்கு பயம் இருக்கோ இல்லையோ, என்னக்கு கதி கலங்குது'.

'சரி சரி. விடுடா. அது தான் 4 வருசம் இருக்கே. போக போக சரியாயிடுவான்.'

'என்னவோ போங்கப்பா. தினமும் சாயங்காலம் 6 மணில இருந்து 9 மணி வரைக்கும் கல்யாணி கூடவே இருந்து படிப்பிக்கிறாள். தனு நல்லா படிக்கிறாள். ஆன இவன்..... டேய், அடுத்த தடவை மட்டும் இப்படி மாக்ஸ் எடு, அப்புறம் நடக்கிறதே வேற' என கூறி கோபமாக அவர் அறைக்குச் சென்றார்.

இதனைப் பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்த தனுவும் தனது அறைக்குச் சென்று சமத்தாக படிக்கத் தொடங்கினாள்.இல்லாவிடில் அப்பாவின் தற்போதைய கோபத்திற்கு நிச்சயம் தானும் பலியாடாவோம் என்பது அவளுக்குத் தெரியும்.

பேரனை கவலையுடன் பார்துகொண்டிருந்த மாமானாரிடம் 'அன்னிக்கு என்ன மாமா சொன்னிங்க, இவன் உங்கள மாதிரி விளையாட்டுப் பிள்ளை ஆனா படிப்புல கெட்டியா? இப்ப பார்த்திங்களா எவ்வளவு கெட்டினு'

'சும்மா இருமா. பாவம் பிள்ளை. இப்பிடி போட்டு அடிச்சிருக்கான். எப்படி அழுகுறான் பாரு. '

'அவனுக்கு வேணும் மாமா. அவர தவிர இந்த வீட்டில யார்கிட்டேயும் அவனுக்கு பயம் இல்லை. அப்பப்போ இவர் இப்படி நாலு போட்டா தான் திருந்துவான். அப்புறம் இவனா அழுகிறான். நடிக்கிறான் மாமா. நம்பாதிங்க. சரியான திருடன்.'

'என்னம்மா இப்படி சொல்கிறாய். எப்படி வலியில துடிச்சு அழுகிறான். இத நடிப்பு என்று சொல்கிறாயே'

'தாய் அறியாத சூழ் இந்த உலகத்தில இல்லை மாமா. அவன் கிடக்கிறான். நீங்க உங்க வேலைய பாருங்க மாமா' என்று கூறி சமையலறை நோக்கிச் சென்றார்.

இருந்தாலும் பேரனின் அழுகையைப் பார்த்து மனம் கேட்காததால் அவன் அருகில் சென்று தலையைத் தடவி ' ரொம்ப வலிக்குதா சங்கர்' என்றதற்கு. அவன் 'அப்பா ரூம் கதவு சாத்திட்டாரா' என்று மெதுவாக கேட்டான். இப்படி ஒரு பதிலை எதிர்பார்க்காதவர் முழித்து 'என்னடா சொன்னாய்' என்று வினவினார்.

'இருங்க தாத்தா' என்று கூறி எட்டி அப்பாவின் அறையை நோட்டம் விட்டவன், அது பூட்டியிருப்பதைப் பார்த்துவிட்டு, அப்பாடி.... என நிம்மதி பெருமூச்சு விட்டு சோபாவில் அமர்ந்தான்.

இவன் செய்கையைப் பார்த்த வைத்தியலிங்கத்திற்கோ பேச்சே எழவில்லை.

அதிர்ச்சியில் நின்றுகொண்டிருந்த தாத்தாவினைப் பார்த்த சங்கர்,' ஏன் தாத்தா

நிக்கிறிங்க. பக்கத்தில உட்காருங்க என்று கூறி கையை பிடித்து அமர்த்தினான். அதன் பின் மெதுவாக அவர் காதில், 'வலிக்குதானு கேட்டிங்களே தாத்தா. லைட்டா.... ரிப்போட் பார்த்திட்டு அப்பா அடி பின்னப்போறார் என்று தெரியும். அதான் பெல் பொட்டம் ஜீன்ஸும், உள்ள நாலு டீசர்ட் போட்டு மேல இந்த ஃபுல் ஸ்லீவ் சர்டும் போட்டிருக்கேன். இருந்தாலும் கொஞ்சம் அங்க இங்க அடி பட தான் செய்திருக்கு. அது தான் லைட்டா வலிக்குது. மத்த படி I'm ok. You don't worry தாத்தா என்றான்.

இதனைக் கேட்டவரோ அடப்பாவி என்றொறு பார்வையை பேரனை நோக்கி வீசினார். இது எதையும் கண்டு கொள்ளாது சங்கரோ 'சரி தாத்தா, நான் உள்ள போய் படிக்கிறேன். இன்னும் ஒரு வாரத்துக்கு சோகமா படிச்சிட்டு இருந்தா தான் என் அப்பாவை மலையிறக்க முடியும். அப்ப தானே அடுத்த தவணைக்கு போக இருக்கிற campக்கு அப்பா என்னை போக விடுவார். அதால நான் இப்ப உள்ள போறேன் தாத்தா. Bye.........' என்று கூறி அவன் அறை நோக்கிச் சென்றான் கையில் அவன் அம்மாவின் கைபேசியுடன். அப்பொழுது தானே அவனால் ரகுவை அழைத்து அவன் வீட்டில் நிலவரத்தை அறிந்துகொள்ள முடியும்.

அறைக்குச் செல்கின்ற பேரனையே 'இவனையெல்லாம் எந்த கணக்கில சேர்க்கிறது' என்று திகைப்புடன் பார்த்திருந்த வைத்தியலிங்கத்தின் கைகளில் தேனீர் கோப்பை திணிக்கப்பட்டது. நிமிர்ந்தவரின் முன் நின்ற கல்யாணியின் கண்கள் அவரிடம் சொல்லியது,

**'இதுக்குத்தான் நான் அப்பவே சொன்னேன்'**

## அப்துல் கலாம்

**-விசாகன் பசுபதிதாசன்-**

அப்துல் கலாம் பதினைந்தாம் திகதி அக்டோபர் மாதம் இராமேஸ்வரத்தில் ஒரு தமிழ் பேசும் முஸ்லீம் குடும்பத்தில் பிறந்தார். அவரின் தந்தை ஐய்னூபின் ஒரு படகுத் தொழிலாளி. தாயார் ஐய்சியம்மா இல்லத்தரசி. கலாம் அவர்களுக்கு கடைசிப்பிள்ளை. காலங்கள் உருண்டோட படகுத்தொழில் நட்டத்தை எதிர் நோக்கியது. இதனால் குடும்பம் பொருளாதாரத்தில் பின்தங்கியது. மேலதிக குடும்ப வருமானத்தை ஈட்ட கலாம் செய்த்தித் தாள்களை விற்று வந்தார்.

பாடசாலையில் கல்வி கற்கும் பொது கலாம் ஒரு சராசரி மாணவன். ஆனாலும் முயற்சியோடு படித்தார். பாடசாலைக்கல்வியை நிறைவு செய்து கொண்டு பட்டப்படிப்புக்காக மெட்ராஸ் சென்றார். அங்கு பௌதீகவியலில் பட்டம் பெற்றார். கலாமின் கனவு ஒரு விமான ஓட்டி ஆவதுதான். அது நிறைவேறவில்லை. ஆனாலும் ஒரு விஞ்ஞானி ஆனார். அணுசக்தி சம்பந்தமான பல கண்டுபிடிப்புக்கள் முலம் பெரும் நன்மதிப்பையும் பெற்றார். சிலவருடங்களின் பின்பு 2002ல் இந்தியாவின் மதிப்புக்குரிய ஜனாதிபதி ஆனார். 2007ல் பதவியை துறந்து விஞ்ஞான துறைக்கு அளப்பரிய சேவை ஆற்றினார். இறுதிக்காலத்தில் மாரடைப்பால் வருந்திய போதும் தனது நாட்டின் விஞ்ஞான வளர்ச்சிக்கு பெருன்தொண்டற்றி இறைவனடி சேர்ந்தார்.

# நான்

உதட்டில் சிரிப்பைக் கண்டு
மகிழ்ச்சி என நம்புவார்கள்
ஆனால் கண்களை ஆழ்ந்து பார்த்தால்
காரிருள் தன்னை காண்பார்கள்

யாருக்குத் தெரியும்?
என் மேல் நான் கொண்ட வெறுப்பு
அவர்களுக்கு ஒரு நாளும் புரியாது
உடைந்து போன என் மனது

நான் தன்நம்பிக்கை உள்ளவள்
என நம்ப விரும்புகிறேன்
நான் விலை மதிப்பற்றவள்
என நம்ப எத்தனிக்கிறேன்

ஆனால் என் ஆழ்மனத்தின் அசுரர்களே
அதை மறுக்கிறார்கள்
இந்த போராட்டத்தில்
என் வாழ்க்கையை முடிக்கப் பார்க்கிறார்கள்

அடுத்தமுறை என்னை காணும் போது
என் கண்களை உற்றுப்பாருங்கள்
காரிருள் பேய்களை கண்டால்
என்னைக் காப்பாற்றுங்கள்

–ஆரபி மதியழகன்–



கூஷாலினி யெய்சங்கர்



# தேன் சிந்தும் மலர்கள்

-சங்கரி அப்பன்-

இந்த உலகில் வாழ்வதே அழகான விஷயம் என்று உணர்வு பூர்வமாக நினைக்கும் எவர்க்கும் வாழ்க்கை வசப்பட்டுவிடும். பிணி, மூப்பு, வலி, வேதனை, துன்பம் போன்ற குறைபாடுகளுடன் சதா போராட வேண்டியிருக்கிறதே, இதுவா வாழ்க்கை என்று சலிப்பவர்களுக்கு, வாழ்க்கை கசப்பாகத்தான் தெரியும். இடர்களும் துன்பங்களும் முள் போல் குத்தாமல் ஏது வாழ்க்கை? முள் நடுவே குட்டி குட்டி ரோஜாக்கள் பூக்கிறதே! அந்த அழகியலிடம் துன்பியல் தோற்கும். பாரதியார் வறுமையில் வாழ்ந்ததாக வரலாறு சொல்கிறது. ஆனால் அவர் கவிதையில் நாம் காண்பதோ செழிப்பு!

**'எத்தனை கோடி இன்பம் வைத்தாய் - எங்கள்**

**இறைவா! இறைவா! இறைவா!**

**அத்தனை உலகமும் வர்ணக் களஞ்சியம்**

**ஆக பலப்பல அழகுகள் வைத்தாய்'**

உலகில் வாழ்வதே அழகான விஷயம் என்பதைத்தானே இவ் வைர வரிகள் உறுதிப்படுத்துகின்றன. மனிதர்களின் உணர்வின் வெளிப்பாடு, எட்டு வகையுள் அடங்கும். அந்த எட்டு வகையிலும் ஒரு சுவை உள்ளது என்கிறது தொல்காப்பியம். அந்தப் பாடல் ....

**'நகையே, அழுகை, இளிவரல், மருட்கை,**

**அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்று**

**அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப.'**

இலக்கணம் வகுத்துவிட்டார், தொல்காப்பியர். சாமான்ய மக்கள், அதைப் புரிந்து கொள்வது எப்படி? இலக்கியத்தின் வாயிலாக இவ்வுண்மையை புரிந்து கொள்ளலாம். சங்க இலக்கியப் பாடல்கள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றுள் சில துளிகள் மூலம் இந்த எட்டு வகை மெய்ப்பாடுகளில் அழகும் சுவையும் மிகுந்திருப்பதை நாம் இப்பொழுது காண்போம்.

முதலில் வரும் நகையை எடுத்துக்கொள்வோம். நகை என்பது சிரிப்பு. மனிதனின் இந்த மெய்ப்பாடு நான்கு வகைப்படும். நகை, இகழ்ச்சியிற் பிறப்பது. எள்ளல், இளமை, பேதமை, மடன் என்ற நான்கும் நகை பொருளாகும். நகையின் வகையான எள்ளல் எனும் வெளிப்பாட்டை பள்ளுப் பாடல்களில் காணலாம். சிந்தும், விருத்தமும் விரவி, பாடப் பெற்ற சிற்றிலக்கியங்களில் ஒன்றான பள்ளுப் பாட்டில், எள்ளல் எனும் நகை உணர்வு, பள்ளியரின் ஏசல் பகுதி மூலம் நாம் அறியலாம். மூத்த பள்ளி, திருமாலை வழிபடுபவள். இளைய பள்ளி, சிவனை வழிபடுபவள். அவர்களின் எள்ளல் எப்படி களைகட்டுகிறது பாருங்கள். மூத்த பள்ளி சிவனை ஏசி எள்ளலுடன் பாடுகிறாள்....

**'சுற்றிக் கட்ட நாலு முழத்துண்டும் இல்லாமல் புலித்**

**தோலை உடுத்தான் உங்கள் சோதி அல்லோடி'**

ஒரு வேட்டி கட்டிக்க வக்கில்லாமல், புலித் தோலை உடுத்தித் திரிகிறானே உங்கள் சோதியான சிவன் என்று அவள் எள்ளலுடன் கூற, பதிலடி கொடுக்கிறாள் இளைய பள்ளி....

**'மாட்டுப் பிறகே திரிந்தும் சோற்றுக்கில்லாமல் -**

**வெறும்**

**மண்ணை யுண்டான் உங்கள் முகில் வண்ணன் அல்லோடி'**

சரிதான் போடி, உங்கள் முகில்வண்ணன் லட்சணம் தெரியாதா? மாடுகள் பின் திரிந்தும், சோத்துக்கு வக்கில்லாமல், வெறும் மண்ணை உண்ட கதை தெரியாதோ? என்று எள்ளி நகையாடுகிறாள். சமயங்களை இவர்கள் தாக்குவது போல் தோன்றினாலும், சமய எண்ணங்களையும் கதைகளையும் சுவையாகத் தருவதுதான் கவிஞனின் நோக்கமாகும். இதனை இயற்றியவர் கடிகை முத்துப் புலவர். நகைக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியரின் பொருள் பொதிந்த வெளிப்பாட்டை இவ் விலக்கியம் முழுமைப்படுத்திக் காட்டிவிட்டதல்லவா? ஒரே கணவனை அடைந்த இப் பள்ளியர் போடும் எள்ளல் சண்டையில் இவ்வளவு சுவை உள்ளதா? என்று எண்ண வைக்கிறார் கவிஞர்.

அடுத்து, அழுகை. அழுகை என்ற வெளிப்பாடு, நான்கு வகையால் வெளிப்படும் என்கிறார் தொல்காப்பியர். அது: இளிவு, இழவு, அசை, வறுமை. இவற்றால் தாக்கப்படின் அழுகை வரும். இழவு என்பது இழத்தல். தன் உயிரை போர்க்களத்தில் ஒரு வீரன் இழக்கிறான். போர்க்களத்திற்கு வரும் அவன் மனைவி, அவசரமாக அவன் உயிர் நீக்கும் முன் தன்னுயிர் ஈர்ந்து, தன் உடலால் அவன் உடல் தாங்குகிறாள் என்று இழப்பின் மூலம் வரும் அழுகைக்கு இலக்கிய உதாரணமாக இப்பாடலைத் தருகிறார் கவிஞர்.

**'தரைமகள் தன்கொழுநன் தன் உடலந் தன்னைத்**

**தாங்காமல் தன் உடலால் தாங்கி, விண் நாட்டு**

**அரமகளிர் அவ்வுயிரைப் புணரா முன்னம்**

**ஆவி ஒக்க வருவாளைக் காண்மின் காண்மின்'**

இப்பாடல், சிற்றிலக்கியங்களில் ஒன்றாகத் திகழும் பரணி பாடலாகும். இந்த உயிரிழப்பைக் கண்ட பின் வாழ்வது அழகான விஷயம் என்று எப்படித் தோன்றும்? இந்த உலகில் அவர்கள் வாழ்வு, முடிந்துவிட்டது. ஆனால் விண் உலகில் அவர்கள் வாழ்க்கை தொடரும். இப்படித்தான் அப் பெண் எண்ணுகிறாள். அதனால், தன் கணவனின் உடலை மண்மகள் தீண்டிவிடக் கூடாது என்று தன்னுயிர் நீர்த்து, தன் உடலால் அவன் உடல் தாங்கி, மண்மகள் அவன் உடலைத் தாங்காமல்ப் பார்த்துக்கொண்டாளாம். பின், அவள் முதலில் உயிர் நீத்ததால் விண்ணுலகம் முதலில் சென்று, அடுத்து வரும் கணவனை வரவேற்கத் தயராகிவிட்டாளாம். எங்கே விண்மகள் வந்து தீண்டி அவனை வரவேற்றுவிடப் போகிறாளோ என்றுதான், அவள் முதலில் உயிர் நீத்தாளாம். அவர் எனக்கே சொந்தம் என்று, அன்பு கொண்ட ஒரு மனைவியின் செயல், பிரமிப்பாக இருக்கவே, கவிஞர், 'காண்மின் காண்மின்' என்று பாடலை முடித்திருக்கிறார். விண்ணுலகில் தன் கணவனுடன் சேர்ந்து வாழ்வேன் என்ற அப் பெண்ணின் நம்பிக்கையும் 'என் புருஷன்தான், எனக்கு மட்டும்தான்' என்கிற அழகியலாலும் இங்கு துன்பவியல் தோற்கிறது.

பரணி பாட்டின் காதல் மனைவி அப்படியென்றால், இங்கே கம்பராமாயணக் காதலியான சூர்ப்பநகையின் காதல் இழிவரல் சுவையைக் காட்டுகிறது. இழிவரல் என்பது வருத்தம், பரிதாபம். மூப்பு, பிணி, வருத்தம், மென்மை நான்கும் இழிவரல் மெய்ப்பாட்டின் வழித்தோன்றும். லட்சுமணனிடம் மூக்கறுபட்ட சூர்ப்பநகை, இராமனிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கிறாள்.

**'இளையவன்தான் அரிந்த நாசி**

**ஒருங்கிலா இவளோடும் உறைவனோ**

**என்பானேல் இறைவ! ஒன்றும்**

**மருங்கிலா தவளோடும் அன்றோ நீ**

**நெடுங்காலம் வாழ்ந்த தென்பாய்'**

ராமபிரானே! நீ என்னை ஏற்றுக் கொள்ளவில்லை சரி. உன் இளவலான லட்சுமணனை, என்னை ஏற்றுக் கொள்ளச் சொல், என்கிறாள். ஒருவேளை அவன், 'நாசியில்லாதவளோடு எப்படி நான் வாழ்வேன்?' என்று கேட்டால், 'இடையே இல்லாத சீதாதேவியோடு இத்தனை நாள் நான் வாழவில்லையா?' என்று திருப்பிக் கேளுங்கள் என்கிறாள். தன்னையே இழிவுபடுத்தி தாழ்த்திக் கொண்டுவிட்ட சூர்ப்பநகையின் காதல் இழிவரல் சுவையைக் காட்டுகிறது.

அடுத்து வருவது மருட்கை. இது வியப்பால் தோன்றுவது. புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் என்று நால்வகைப் பொருண்மையால் பிறக்கும். வியப்பால் தோன்றும் மருட்கைகைப் பார்ப்போம்....

**'குருகொளக் குளித்த கெண்ட அயலது**

**உருகெழ தாமரை வான்முகை வெரூஉம்....'**

என்பது பாடல். ஒரு நாரை பற்ற முயன்றபோது, ஒரு கெண்டை மீன் அதனிடமிருந்து தப்பித்து ஓடியதாம். பிறகு நீரில் மூழ்கி மேலெழுந்தபோது, அதன் கண்ணெதிரே வெண்தாமரை அரும்பு ஒன்று தோன்றியதாம். அந்த அரும்பு, நாரை போலவே தோன்ற, கெண்டை மீன் வியந்து, மருண்டு, ஓடியதாம். மீனின் இந்த மருட்சி, நியாயமானது தானே. உலகிலுள்ள எல்லா இன்பங்களையும் துன்பங்களையும் கண்டு, ஒரு கவிஞனின் உள்ளம் மகிழவோ வருந்தவோ செய்கிறது.

அடுத்து வரும் அச்சம் என்பதில் உள்ள சுவையை கைகேயி ராமாயணத்தில் உணர்த்துகிறாள். 'அச்சம் என்பது மடமையடா' என்ற பாடல் வரியும், அஞ்சுவதில் அஞ்சி நின்றால் அச்சமாகுமா? என்கிற வரியும் முரண்பாடாக உள்ளதே என்கிற குழப்பத்தைக் கம்பர் தீர்த்து வைக்கிறார். ராமனிடம் சென்று கைகேயி சொல்கிறாள்....

**'ஆழிசூழ் உலகம் எல்லாம்**

**பரதனே ஆள நீ போய்**

**தாழிரும் சடைகள் தாங்கித்**

**தாங்கரும் தவமேற் கொண்டு**

**பூழிவெங் கானம் நண்ணிப்**

**புண்ணியத் துறைகள் ஆடி**

**ஏழிரெண்டு ஆண்டில் வாவென்று**

**இலம்பினன் அரசன் என்றாள்'**

பிறர் பொருளைக் கவரும்போது அச்சம் வரும் என்பது இலக்கணம். இங்கே, கைகேயி, ராமனுக்கு உரிதான அரசபதவியை கவர்ந்து தன் மகன் பரதனுக்கு உரிதாக்க எண்ணும்போது, அவளுக்கு அச்சம் வருகிறது. எனவே பழியை அரசன் மேல் போடுகிறாள். அவள் ஏதும் அறியாதவளாம். எல்லாம் இயம்பியது அரசன்தானாம். இயம் என்றால் மேளம். மேளம் போல் ஓங்கிச் சொல்லிவிட்டார் அரசன் என்கிறாள். தவம் செய்து பெற்ற மகனை வெப்பமான கானகத்திற்கு போகச் சொல்ல எந்த தந்தைக்கு மனசு வரும்? எனவே இயம்பினான் தந்தை என்று சொல்ல அவள் வாயே கூசியதால் இலம்பினன் அரசன் என்று முடிக்கின்றாள். 'பரதனே ஆள' என்பதில் உள்ள ஏகாரம், பிரிநிலை. பரதனுக்குத் துணையாக நானும் ஆள்கிறேன் என்று ராமன் சொல்லிவிடுவானோ என்ற அச்சத்தால் இதில் உனக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்று தெளிவாகக்

காட்டவே, அந்த ஏகாரம். ஒரு கள்வனைப்போல் கைகேயி நடந்துகொள்வது, நமக்கும் அச்சத்தை வரவழைக்கிறது.

ஆண்டாள் பாடிய பாடல்கள், நாச்சியார் திருமொழியும் திருப்பாவையும் ஆகும். இறைவனைக் காதலனாகவும் தன்னைக் காதலியாகவும் பாவித்து பாடப்பட்டது. அப் பாடல் தொகுப்பு பெருமிதச் சுவை கொண்டதாகும். 'மானிடர்க்கென்று பேச்சுப்படில் வாழ்கிலேன்,' என்று உறுதியுடன் தெரிவித்தாள். 'என்ன!? கடவுளை மணப்பதா? பயித்தியமா நீ?' என்றவர்களால், அவள் உறுதி குலையவில்லை. அந்த உறுதியால் பெருமிதம் அடைந்த ஆண்டவன், அவளுக்குக் கொடுத்த கொடைதான், தானே இறங்கி வந்து அவள் கைத்தலம் பற்றிய செயலாகும். ஆண்டாளின் பாடலைப் பாருங்கள்....

**'மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத**

**முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற் கீழ்**

**மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்து என்னைக்**

**கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழி நான்'**

கண்ணனின் கையை அவள் பற்றவில்லை, மதுசூதனனே வந்து அவள் கைத்தலம் பற்றுகிறாராம். ஆண்டவனின் இந்த வள்ளல் தன்மைக்குக் காரணம் ஆண்டாளின் ஆழ்ந்த தூய பக்தியே ஆகும். கல்வி, தறுகண், இசைமை, கொடை என்ற நான்கால் பெருமிதச் சுவை வரும் என்பது இலக்கணம். இங்கு, ஆண்டவனின் கொடை ஆண்டாளின் பெருமிதச் சுவை மிகுந்த பாடலுக்குக் காரணமாகிறது.

வெகுளி என்பது வெறுப்பினால் வரும் கோபம். உறுப்பறை, குடிக்கோள், அலை, கொலை என்ற நால் வகைப் பொருண்மையால் வெகுளி தோன்றும். சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் கோபம், அவள் கணவன் கோவலன் கொலையுண்டதால் ஏற்பட்டது என்று இளங்கோவடிகள் சித்தரிக்கிறார். அந்தப் பாடல்.

**'வாயிலோயே வாயிலோயே**

**அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து**

**இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே**

**இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்**

**கணவனை இழந்தாள் கடையகத் தாளென்று**

**அறிவிப்பாயே அறிவிப்பாயே'**

ஒவ்வொரு சொல்லும் தீப்பொறியாக வெளிவந்து தாக்குகிறது. கண்ணகியின் வீரம், சினமாக கொப்பளிக்கிறது. அறிவு அற்றுப் போன அரசனின் வாயிற் காப்போனே! என்று தைரியமாகச் சொல்கிறாள். மாணிக்கப் பரல் உடைய சிலம்பு ஒன்றை ஏந்தியபடி கணவனை இழந்த பெண்ணொருத்தி உன் வாயிலில் நிற்கிறாள் என்று போய்ச் சொல் என்று கட்டளையிடுகிறாள். பிறகு, மன்னனை நேரில் பார்த்து 'தேரா மன்னா, செப்புவதுடையேன்' என்று அரசன் முகத்திற்கு நேராகவே சொல்கிறாள். ஆராயாமல் நீதியினின்று பிறழ்ந்த, அறிவு அற்றுப் போன தேராத அரசனே என்று இடி முழக்கம் போல் இடித்துரைக்கிறாள். கண்ணகியின் வெகுளி ஒரு வரலாற்றைப் படைக்கிறது. இன்றளவும் பேசப்படுகிறது. மன்னவனாயிற்றே என்று அவள் அஞ்சி அடங்கிவிடவில்லை. நியாயமான கோபத்திற்கு இந்த சமுதாயம் பதில் சொல்லியே ஆகவேண்டும் என்று அன்றே நிரூபித்து காட்டி இருக்கிறாள். அவளின் சினம் அற்புதமானது.

இறுதியாக தொல்காப்பியம் சுட்டும் உவகை, மகிழ்ச்சியில் பிறப்பது. செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு எனும் நால்வகைப் பொருண்மையான் உவகை தோன்றும். சங்கப்

பாடல் ஒன்றில் இப் புலன் வகை மெய்ப்பாடு வெளிப்படுவதைக் காணலாம்.

**'ஒடுங்கு ஈர் ஓதி ஒள்நுதற் குறு மகள்**

**.......சிலமெல் லியவே கிளவி**

**அணைமெல் லியள்யான் முயங்குங் காலே'**

என்கிறது ஒரு குறுந்தொகை பாடல். இளமையைப் புணர்ந்து, நறுமணத்தை நுகர்ந்து, குளிர்ச்சியை உண்டு அவளது அழகினை உயிர்த்து, வர்ணிக்க வார்த்தைகளே இல்லை எனத் தலைவன் தலைவியை ஐம்புலன்களால் உய்த்து உணர்ந்து வெளிப்படுவதினால் புலன் என்ற மெய்ப்பாடு தோன்ற, உவகை அடைவதை அறிய முடிகின்றது. மனிதர்கள் வெளிப்படுத்தும் ஒவ்வொரு உணர்ச்சி பிரவாகத்திலும் ஒரு அழகுண்டு. ஒரு சுவையுண்டு என்று சங்க இலக்கியப் பாடல்கள் கூறுவதைக் கண்டோம். இலக்கணம் வகுத்தது தொல்காப்பியம். அதை இலக்கியமாக்கிற்று சங்கப் பாடல்கள். சட்டம், அறிவியல் முதலிய எவற்றையும் விடப் பெரிய கருவியாய்ச் சமுதாயத்தை உருவாக்குவது இலக்கியமே! எனவே இப் புலவர்கள் சட்டம் இயற்றும் ஆட்சியாளரை விடவும் ஆற்றல் மிக்கவர்களே! தத்துவ ஞானிகளை விடவும் செல்வாக்கு மிக்கவர்களாய் மனிதரின் உள்ளத்தை ஆள்பவர் அவர்களே. ரோஜாக்களை விற்கும் வியாபாரிகளால் அதன் அழகை ரசிக்க முடியுமா? அதனை விற்பதால் கிடைக்கும் காசுதான் அழகாய்த் தெரியும் அவர்களுக்கு. வாழ்க்கை என்பது ரோஜா என்றால், ரோஜா வியாபாரிகள் போல் அதனை விற்று விடாமல், அதனை முட் செடியோடு பதியன் செய்து உணர்வுபூர்வமான நீரை ஊற்றி பேணி வளர்த்தால் ரோஜாக்கள் பெருகும். சிரிக்கும். முட்களை மறக்கச் செய்யும். வாழ்வது அழகான விஷயமாகிவிடும். இதைத்தான் இலக்கணமாக தொல்காப்பியர் கூற சங்கப் பாடல்கள் இலக்கியமாக மென்மைப்படுத்திக் காட்டியிருக்கிறார்கள்.


***இளவேனில் சஞ்சிகைக்கான ஆக்கங்களை***

***அனுப்பி வைக்க வேண்டிய முகவரி :***

Casey Tamil Manram

PO Box 2516,

Fountain Gate,

Vic 3805

**மின்னஞ்சல்:** editor@caseytamilmanram.org.au




**அத்தியாயம் 7** **சூர்யபுத்திரன்**

**முன் கதைச்சுருக்கம்: ஊரிலேயே பெரிய மனிதரும் பணக்காரருமான 72 வயதான முத்துராஜப்பிள்ளையும்அவருடைய இரண்டாவது சன் நடராஜப்பிள்ளையும் அடுத்தடுத்து கொலை செய்யப்படுகிறார்கள். இன்ஸ்பெக்டர்நவநீதகிருஷ்ணன் தலைமையிலான விசாரணைக்குழுவிற்கு உதவுவதற்காக, சி.ஐ.டி ஆபீசர் ஆனந்த் எழும்பூருக்குவருகிறார். சென்னை புதைபொருள் ஆராய்ச்சி மையத்திலிருந்து சில ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்காக இந்தஊருக்கு வந்திருப்பதாகக் கூறி முத்துராஜப்பிள்ளையின் பங்களா அவுட் ஹௌசில் தங்குகிறார் ஆனந்த். இனி....**

எந்த ஒரு அசைவுமின்றி பேச்சு மூச்சில்லாமல் இருந்தார் கைலாசபிள்ளை. கண்கள் மூடி இருந்தன. செயற்கை சுவாசத்திற்காக ஆக்சிஜன் பொருத்தப்பட்டிருந்தது. நிலைமை கொஞ்சம் விபரீதம் என்பதை டாக்டர் மரகதம் ராஜசேகரின் கண்கள் உணர்த்தின.

பெரியப்பாவை அந்த நிலையில் பார்த்ததும் பிரகாஷ் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளமுடியாமல் விம்மினான். எல்லோருடைய முகத்திலும் கவலை அப்பிக்கொண்டிருந்தது.

எல்லோரையும் அழைத்துக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்த டாக்டர் சொல்லப் போகின்ற செய்திக்காக அனைவரும் கலவர ரேகைகளுடன் காத்திருந்தார்கள்.

*“The situation got worsened than anticipated. Live support is the only option and that to be provided immedieately”.*

"பிசினஸ் இன்னா இலாபம் நஷ்டம் எல்லாமே வரத்தான் செய்யும். சொந்த பந்தம்னு நாங்க எல்லாம் இருக்கிறப்ப இப்படி ஒரு முடிவுக்குப் போயிருக்காரு. ஏற்கனவே நொந்து போயிருக்கிற குடும்பம். அத்தையும் கலையரசியும் இத எப்படி தாங்கப் போறாங்க" மறுபடியும் அரற்றினார் சுந்தரமூர்த்தி.

"மிஸ்டர் சுந்தரமூர்த்தி, நீங்க தான் இப்ப இந்த குடும்பத்தில வயசில பெரியவங்க. மத்தவங்களுக்கு ஆறுதல் சொல்ல வேண்டிய நீங்களே இப்படி ஒடிஞ்சு போயிட்டா

எப்படி? தைரியமா இருங்க. *Please sign this consent form*".

டாக்டர் நீட்டிய போர்மில் கையெழுத்து இட்டு விட்டு அப்படியே சேரில் சரிந்து உட்கார்ந்தார் சுந்தரமூர்த்தி. அவர் தோளில் தட்டிக் கொடுத்தார் நவநீதகிருஷ்ணன்.

"டாக்டர், நாங்க யாராவது அவர் கூட தங்கிக்கணுமா"

பிரகாஷின் கேள்விக்கு தலையசைத்து மறுத்தார் டாக்டர். "அவசியமில்லே, லைவ் சப்போர்ட் குடுத்திடறோம். உங்க குடும்ப தெய்வம் முத்துராஜப் பிள்ளையாரை வேண்டிக்குங்க. *Let's hope for the best.*

வெளி வராண்டாவில் உட்கார்ந்திருந்த பரந்தாமன் இவர்களைக் கண்டதும் ஓடி வந்தான்.

"ஐயாவுக்கு எப்படிங்க இருக்கு". முகத்தில் கவலை அப்பட்டமாக ஒட்டியிருந்தது.

"இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாதுன்னு டாக்டர் சொல்றாரு. கடவுள் எங்களைக் கை விட மாட்டாருடா. நீ தைரியமா இரு" சொல்லிக்கொண்டே சுந்தரமூர்த்தி காரின் முன் இருக்கையில் அமர்ந்து கொண்டார்.

"நான் என் வண்டியில போயிடறேன். உங்கள அப்புறமா வந்து பார்க்கிறேன். வீட்டில சின்னப் பசங்க எல்லாம் இருக்கிறாங்க. நீங்க தான் அவங்க மனசு உடையாம பார்த்துக்கணும். பிரகாஷ், *be positive*".

இன்ஸ்பெக்டர் விடை பெற்றுக் கொண்டார்.

டின்னெர் முடிந்து எல்லோரும் பிரகாஷ் உள்ளிட்டோரை எதிர் பார்த்து வராண்டாவில் காத்திருந்தார்கள். கார் உள்ளே நுழைந்ததும் வாசல் வரை எழுந்து ஓடியவர்களுக்கு சுந்தரமூர்த்தியின் முகத்தில் தெரிந்த கவலை ரேகைகள் நிலைமை சீரியஸ் என்பதை உணர்த்தியது.

ஆனந்தின் மொபைலுக்கு ஏற்கனவே விஷயத்தை நவநீதகிருஷ்ணன் எஸ் எம் எஸ் செய்திருந்தார்.

குடும்ப உறுப்பினர்களுடன் பங்களா வேலையாட்களும் நின்றிருந்தார்கள். எல்லோரையும் ஒரு முறை பார்வையால் துழாவி விட்டு, தட்டுத் தடுமாறி கைலாசபிள்ளையின் நிலையை சொல்லி முடித்தார் சுந்தரமூர்த்தி. குறிப்பாக கணவனையும் இரண்டாவது மகனையும் அடுத்தடுத்து பறி கொடுத்த சோகத்தில படுத்த படுக்கையாக இருக்கிற அத்தைக்கு இந்த விஷயம் தெரியாம பார்த்துக்க வேணும் என்பதைக் கண்டிப்பாக சொன்னார்.

கலையரசியும் பெண்களும் அழ ஆரம்பித்தார்கள்.

பிரகாஷும் சுந்தரமூர்த்தியும் அவர்களை முடிந்த அளவுக்கு சமாதானம் செய்ய முயன்று தோற்றுக் கொண்டிருந்தார்கள்.

அறைக்குத் திரும்பிய ஆனந்திற்கு குழப்பமும் கவலையும் சம விகிதத்தில் கலந்து தாக்கியது.

"ஏன், எதற்காக, எப்படி? தொடர் கொலைகள் ஒரு பக்கம் விடை தெரியாத புதிராகத் தொடர்ந்து கொண்டிருக்க இப்படி ஒரு தற்கொலை அட்டெம்ப்ட் வேறு. ஈவினிங் வரைக்கும் மகிழ்ச்சியாக இருந்த

பங்களா இப்போது சோகத்தில் உடைந்து போயிருக்கிறது.

லாப்டாப்பிற்கு உயிர் கொடுத்தான் ஆனந்த்.

இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன் அனுப்பியிருந்த பங்களா வேலையாட்கள் பற்றிய குறிப்புகளை பார்க்கத் தொடங்கினான்.

வேணு (சமையல்காரன்) - வயது 34, வேலையில் சேர்ந்த திகதி 12 ஆகஸ்ட் 1993, பிறந்த இடம் நங்கநல்லூர், சென்னை

ராஜு (கூர்க்கா) - வயது 37, வேலையில் சேர்ந்த திகதி 24 பெப்ரவரி 2001, பிறந்த இடம் ராஜபாளையம், மதுரை

பரந்தாமன் (டிரைவர்) - வயது 33, வேலையில் சேர்ந்த திகதி 14 ஜூலை 2005, பிறந்த இடம் அடையார், சென்னை

காவேரியம்மா (பால் காரி) - வயது 48, பிறந்த இடம் எழும்பூர்

மாரியப்பா (தோட்டக்காரன்) - வயது 53, வேலையில் சேர்ந்த திகதி 4 செப்டம்பர் 1981, பிறந்த இடம் மலைக்கோட்டை, திருச்சி

பெரியவர் முத்துராஜப்பிள்ளை கொலை செய்யப்பட்ட திகதி டிசம்பர் 2009

இரண்டாமவர் நடராஜபிள்ளை கொலை செய்யப்பட்ட திகதி அக்டோபர் 2010

பங்களாவில் நடந்த கொலை முயற்சி நடப்பு ஆண்டு 2011

ஆக கொலைகள் அல்லது கொலை முயற்சி ஆண்டுக்கு ஒன்றாக நடக்கின்றன. மூத்தவர் கைலாசபிள்ளைக்கு ஏதாவது நடந்தால் அடுத்து மிஞ்சப் போவது சுந்தரமூர்த்தி குடும்பமும் அடுத்த தலைமுறை வாரிசுகளும் தான்.

சென்னை இன்ஸ்பெக்டர் ராமகிருஷ்ணனின் உதவியுடன் வெளியே இருந்து வந்து இங்கே வேலைக்கு சேர்ந்தவர்களின் பூர்விகத்தைப் பற்றி அறிந்து கொள்வது முக்கியமாகப் பட்டது. வேலையாட்களைப் பற்றிய குறிப்புகளுடன் ஒரு ஈமெயில் டைப் செய்து அவருக்கு அனுப்பினான்.

தூக்கம் கண்களை சுழற்ற ஆரம்பித்தது. லாப்டாப்பை அணைத்து விட்டு படுக்கையில் விழுந்தான் ஆனந்த்.

சில தினங்களுக்கு முன் கைலாசபிள்ளையின் ரூமை நோட்டமிடச் சென்றபோது சுந்தரமூர்த்தியும் கலையரசியும் பேசிய சம்பாஷனை நினைவில் தட்டிச் சென்றது. அவர் கேக்கறப்போ எல்லாம் பணம் கொடுத்திட்டிருக்க முடியாது என்று சுந்தரமூர்த்தி கறாராகப் பேசியதும், கலையரசி அவரை சமாதனம் செய்ததும் நினைவில் வந்து போக, இடது பக்க மூளையின் சமிக்ஜை ஆனந்தின் தூக்கத்தைக் கலைத்துப் போட்டது.

இன்று நடந்தது ஏன் தற்கொலை என்ற போர்வையில் நடந்த கொலை முயற்சியாக இருக்கக் கூடாது.

**(தொடரும்)**



## அரும்புகள் இறைவனன்றோ !

( எம். ஜெயராமசர்மா ... மெல்பேண் .. அவுஸ்திரேலியா )

அரும்புகள் அணைத்து நின்றால்
ஆனந்த நிலையில் நிற்போம்
நரம்பெலாம் உணர்வு பெற்று
நாம்வேறு உலகம் செல்வோம்

குறும்புகள் செய்யும் வேளை
குதூகலம் நிறைந்தே நிற்கும்
அரும்புகள் நிறைந்த வீடு
ஆலயம் ஆகி நிற்கும்

கவலையோ டிருக்கும் வேளை
கைகளால் எம்மைத் தீண்டி
அவலாம் நிலையைப் போக்க
அரும்புகள் துணையாய் நிற்பார்

மரங்களில் அரும்பு கண்டால்
மாமலர் மலரும் என்போம்
மனைகளில் அரும்பு காணின்
மனமெலாம் நிறைந்தே போகும்

அரும்புகள் இல்லா வீட்டை
ஆருமே விரும்ப மாட்டார்
மருந்துகள் தீர்க்கா நோயை
அரும்புகள் என்றும் தீர்ப்பார்

அரும்புகள் எங்கள் வாழ்வின்
பெரும் பொருள் ஆகியுள்ளார்
அரும்புகள் இல்லா வாழ்க்கை
ஆருக்கும் சுவைக்க மாட்டா

அரும்புகள் பேசும் வார்த்தை
அமுதத்தை ஒக்கும் என்பார்
விரும்பிநாம் கேட்டு நின்றால்
வேதனை பறந்தே போகும்

அரும்புகள் அருகில் வந்து
ஆண்டவன் அணைந்து நிற்பான்
ஆதலால் எங்கள் வாழ்வில்
அரும்புகள் இறைவன் அன்றோ !